21-2-1963 + 21-11-1943 -
Two copies. (2)

Phone No. 3249 TAMIL MANI Rged. No. M. 3384

தமிழ் மணி

எல்லாரு மோர்குலம் எல்லாருமோரினம்
எல்லாரு மிந்திய மக்கள்

[வாரப் பதிப்பு]

எல்லோரு மோர்நிறை எல்லோரு மோர் விலை
எல்லோரும் இந்நாட்டு மன்னர்-பாரதி.

மணி 9 ஓசை 1 | சென்னை—சுபானுஞு கார்த்திகைமீ 6வ ஞாயிற்றுக்கிழமை (21-11-43) | 12 பக்கம் 0-2-0

மணிரதம்

பிள்ளையார் பிடிக்க குரங்கு!
கடுகு சிறுத்தாலும் காரம் போகுமா?
பித்தம் தெளியவில்லை!-பழைய பெருச்சாளி!
பிட்டுத் தின்ற அம்மையார்!-திக்குமுக்கு வேதாந்தம்!
வானத்தைப் பிளந்து வைகுண்டம்! - குள்ளநரி சலசலப்புக்கு அஞ்சுமா?

பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்ததாம்! நெருக்கடியான இந்த சமயத்தில் லெபனுன் நேச நாடுகளுக்கு ஒரு சனியனுக வந்து சேர்ந்தது! லெபனுன் அரபிய நாடுகளில் ஒன்று; ஒரு சிறிய நாடு; அதன் ஜனத் தொகை 7 லட்சந்தான். பிராஞ்சு மாண்டேட் நாடுகளில் ஒன்று! கடுகு சிறுத்தாலும், காரம் போகுமா? லெபனுன் சிறு நாடாக இருந்தபோதிலும், அதன் சுதந்திரப் போராட்டம் உலகத்தையே பிரமிக்கச் செய்துவிட்டது! பிரஞ்சுசுதந்திரக்கமிட்டியைலெபனுன்தினறடித்துவிட்டதுபிரஞ்சு சுதந்திரக் கமிட்டியினர் லெபனுன் சுதந்திரத்தில்மண்ணைப்போடப்பார்த்தார்கள்; லெபனுன் பார்லிமெண்ட் தலைவரையும், மந்திரிகளையும், சுமார் 30 பார்லிமெண்ட் அங்கத்தினர்களையும் கைது செய்து சிறைக்குள் தள்ளினர். இதனுல் ஏற்பட்ட கலவரத்தை ராணுவ பலத்தைக் கொண்டு அடக்க முயன்றனர். சுமார் 13 பேர்களைச் சுட்டுக்கொன்றனர்; 140க்கு மேற்பட்டவர்களை சுட்டுக் காயப்படுத்தினர். அதன் பலன் என்ன? லெபனுன் சுதந்திரப் போராட்டத்தை நசுக்க முடிந்ததா? இல்லை; மாணவரும், பெண்களுங்கூட அப் போராட்டத்தில் துணிந்து இறங்கினர். அங்கு கிறிஸ்துவர்கள் மெஜாரிட்டி; முஸ்லிம்கள் மைனுரிட்டி. என்றுலும், முஸ்லிம்கள் அங்கு பாகிஸ்தான் கேட்கவில்லை! கிறிஸ்துவர்களுடன் சேர்ந்து சுதந்திரமே வேண்டுமென்று கிளர்ச்சி செய்து வருகிருர்கள். சுதந்திரம் கொடுத்தாலொழிய லெபனுன் கிளர்ச்சி நிற்கப் போவதில்லை. ராணுவத்தைக் கொண்டு பயமுறுத்தினுலுஞ்சரி; துப்பாக்கி, குண்டுகளைக் கொண்டு துன்புறுத்தினுலுஞ்சரி; லெபனுன் சுதந்திரப் போராட்டத்தை அவ்வளவு சுலபமாக நசுக்கிவிட முடியாதென்பது நிச்சயம்.

பித்தம் தெளியவில்லை!

* சுதந்திரத்தை இழந்து நாடோடியாகத் திரியும் பிரஞ்சு சுதந்திரக் கமிட்டியினருக்குக்கூட, ஏகாதிபத்தியப் பித்தம் தெளியாமலிருக்கும்போது பிரிட்டனைப் போன்றபழம் பெருச்சாளிகளுக்கு ஏகாதிபத்தியப்பித்தம் எப்படித் தெளியப்போகிறது? லெபனுன்ஒரு சுண்டைக்காய் நாடு; அந்தச் சுண்டைக்காயை பெருவிரலால் நசுக்கிவிடலாமென்று பிரஞ்சுக்காரர் நினைத்தார்கள்! ஆனுல், லெபனுன் நாடிழந்த பிரஞ்சுக்காரருக்கு மட்டுமல்ல, நேசநாடுகளுக்கே நல்ல புத்தி கற்பித்தது. அமெரிக்காவின் வாயடைத்துவிட்டது! லெபனுன் சுதந்திர கிளர்ச்சியைப் பற்றி வாய்கூடத் திறக்கவில்லை. பிரிட்டனே பிட்டுத்தின்ற அம்மையார் மாதிரி பேபேயென்று விழிக்கிறது! லெபனுன் சுதந்திரத்தைப் பற்றி இன்னதுதான் சொல்லுவதென்பதை அறியாமல் பிரிட்டன் திண்டாடுகிறது! உண்மையை விழுங்கவுமுடியவில்லை. வெளியில் தள்ளவும் முடியவில்லை. அது தொண்டையில் அடைத்துக்கொள்ளவே, திக்குமுக்காடி, ஏதோ வேதாந்தம் பேசுகிறது! எப்பேர்ப்பட்ட வேதாந்தம்? ஊருக்கு உபதேசம் உனக்கில்லையடியென்ற வெறும் வேதாந்தம்! லெபனுன் சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டியது அவசியம்தானும்! ரொம்ப சரி; 7 லக்ஷம் பேர் கொண்ட லெபனுன் சுதந்திரத்தை ஆதரிக்கும் பிரிட்டிஷாருக்கு, 40 கோடி இந்திய மக்கள் சுதந்திரம் கண்ணில் படவில்லையா? பிரிட்டிஷார் கண் இழந்த கபோதிகளா? ஆம்; கபோதிகளே! லெபனுன் சுதந்திரத்தைக்கூட அவர்கள் மனப்பூர்வமாக ஆதரிக்கவில்லை; வேண்டாவிருப்பாக ஆதரிக்கிருர்கள்; வெகு தந்திரமாக தட்டிக்கழிக்கவும் பார்க்கிருர்கள்!

அச்சமில்லை!

யுத்தப் பேய், பஞ்சப் பேய் போன்ற பல பேய்களையும், எண்ணிறந்த இடையூறுகளையும் எதிர்த்து, "தமிழ் மணி" 8 ஆண்டுகளை வெற்றிகரமாக முடித்தது; அன்னையின் ஆசிபெற்று, அச்சமின்றி, அதன் 9-வது ஆண்டிலும் வெற்றி பெற தமிழ் அன்பர்கள் அருள்புரிவார்களாக.

திருடனை தேள் கொட்டியதுபோல்!

* திருடனைத் தேள்கொட்டிய மாதிரி, பிரிட்டிஷார் இந்த சமயத்தில்திணறுவதற்குக் காரணம் தெரியுமா? இந்தியா விஷயத்தில் அமெரிக்கர் தலையிடக்கூடாது; அது உள்நாட்டு விவகாரம்; அதில் அமெரிக்கர்தலையிடுவதுநீதியல்லவென்று பரமயோக்யர்களைப்போல் பேசுகிருர்கள்! பிரிட்டிஷார் மட்டும் லெபனுன் பிரச்னையில் தலையிட என்ன நியாயமிருக்கிறது? பிரிட்டிஷாருக்கு லெபனுன் விஷயத்தில் தலையிட உரிமை இருந்தால், அமெரிக்காவுக்கு இந்தியா விஷயத்தில் தலையிட உரிமை இல்லையா? அமெரிக்காவைத் தட்டிக் கேட்ட பிரிட்டிஷாருக்கு லெபனுன் விஷயத்தில் சங்கடமும், சங்கோசமும் ஏற்படுவது இயற்கைதான். அதனுல்தான் நுனிப்புல் மேய்வதுபோல் பட்டும் படாமலும் லெபனுன் விஷயத்தில் பிரிட்டிஷார் தலையிட்டிருக்கின்றனர்! சுதந்திர பிரஞ்சுக் கமிட்டியினர் திருப்பிக் கேட்டால் பிரிட்டிஷாருக்கு வாய் ஏது? லெபனுனுக்கு சுதந்திரம் கொடாமல் அங்கு ஏற்பட்டிருக்கும் கலவரத்தை அடக்க முடியாது. லெபனுனுக்கு உடனே சுதந்திரம் கொடுக்க வேண்டும். இதர நாடுகளைப்போல் அது சுதந்திர நாடாக இருக்க வேண்டும். யுத்த காலத்தில் லெபனுனை யுத்த தளமாக உபயோகிக்க நேச நாடுகளுக்கு உரிமை இருக்கலாம்! ஆனுல், அதன் சுதந்திரத்தை மறுக்க முடியாது; அதன் சுதந்திரக் கிளர்ச்சியை நசுக்கவும் முடியாது! அங்கு கைதியான தலைவர்களையும், மந்திரிகளையும் உடனே விடுதலை செய்து மீண்டும் பழைய சர்க்காரை ஜனநாயக சுதந்திரத்துக்காகவே, இப் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதாக நேச நாடுகள் சொல்லுவதெல்லாம் வெறும் ஹம்பக்!

அவாளுக்கு இவாள்!

* லெபனுனில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியைச் சமாளிக்க டிகால் கைக்கொண்ட மிருகத்தனமான அடக்குமுறை பிரஞ்சுக்காரரைமட்டுமல்ல, சகல நேச நாடுகளையும் பாதிக்கும். சுதந்திர பிரஞ்சுக் கமிட்டியாரிடம் இதர நாடுகள் கொண்டிருந்த அபிமானத்துக்கும், ஆதரவுக்கும்பங்கம் ஏற்படலாம். அவாளுக்கு இவாள் எழுந்திருந்து உண்பாள் என்றே உலக மக்கள் நினைப்பார்கள்; பிரிட்டிஷாருக்கு பிரஞ்சுக்காரர் சம்பட்டையல்ல; எல்லாம் ஒரு "பீஸ்" தான்! லெபனுனுக்கு ஏற்பட்ட இந்த தர்ம சங்கடமான நிலைமையில் சகல அரபிய நாடுகளும் ஒன்று சேர்ந்து லெபனுன் சுதந்திரத்தைப் பாதுகாக்க முன்வந்தது பாராட்டத்தக்கதே. ஆனுல், இந்தியாவின் நெருக்கடியைப்

(அடுத்த பக்கம் பார்க்க)

மனோரதம்

(முதல் பக்கத் தொடர்ச்சி)

பூதம் மிரட்டுதே!

போக்க எந்த நாடாவது முன்வந்ததா? இந்தியாவில் 10 கோடி முஸ்லிம்கள் இருக்கிறார்கள் என்றாலும், வெளிநாட்டு முஸ்லிம்கள் இந்தியாவின் நெருக்கடியைப்பற்றி ஏதாவது சொல்லுகிறார்களா? அல்லது, இந்திய சுதந்திரத்தை ஆதரிக்கிறார்களா? இல்லை; ஆனால், அரபிய நாடுகளின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். ஆனால் இந்தியாவிலுள்ள முஸ்லிம்களோ வெளிநாட்டு முஸ்லிம்கள் உரிமையைப் பாதுகாக்க முந்திரிக்கொட்டைமாதிரி முன் வருகிறார்கள்! அவர்கள் சுதந்திரத்தை மறந்துவிடுகிறார்கள்; அவர்கள் அடிமைகள் என்பதை அடியோடு சிந்தித்துப் பார்ப்பதில்லை. ஆனால், துரோகிகள் எங்குமுண்டு; குய்ஸ்லிங்குளுக்கு எங்கும் பஞ்சமே கிடையாது! லெபனுனில்கூட எமிலி எட்டி குய்ஸ்லிங் ஆனார்! அவரைக்கொண்டு பிரஞ்சுக்காரர் ஒரு பொம்மை சர்க்காரை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்த பொம்மை சர்க்காரைத் தீண்டுவாருமில்லை, தேடுவாருமில்லை! அந்த சர்க்காருடன் ஒத்துழைப்பார் யாரையும் காணோம்; லெபனுனில் அமைதி நிலவுவதாகவும், கலவரங்கள் அடங்கிவிட்டதாகவும் செய்திகள் வருகின்றன. ஆனால், லெபனுனுக்கு சுதந்திரம் கொடுக்காமல் அங்கு அமைதி ஏற்படாதென்பது நிச்சயம். லெபனுனில் ஏற்பட்ட அமைதியின்மையும், கலவரங்களும் இதர அரபிய நாடுகளுக்குப் பரவலாம்; ஆகவே, நேச நாடுகள் நெருக்கடியான இந்தச் சமயத்தில் புத்தியைக் கடன் கொடுத்துவிடக்கூடாது! சுதந்திரம் கோரும் நாடுகளுக்கு உடனே சுதந்திரம் கொடுத்து, அந்த நாடுகளின் ஒத்துழைப்பைப் பெற வேண்டும், வெற்றிக்கு அதுதான் சரியான வழி.

வைகுண்டமா?

* நேச நாடுகள் அச்சு நாடுகளைப் பழிக்கின்றன; அச்சு நாடுகள்மீது குப்பைக் கூளங்களை வாரிக்கொட்டுகின்றன! ஆனால், நேசநாடுகளின் யோக்கியதை என்ன? இந்தியா, லெபனுன் போன்ற நாடுகளே நேசநாடுகளின் யோக்கியதையைக் காட்டப் போதுமானவை! நேற்று ஜெயித்த பர்மா, மலேயா, சீனு, பிலிப்பைன் போன்ற பிரதேசங்களுக்கு ஜப்பானியர் சுதந்திரம் கொடுத்திருப்பதாகச் சொல்லுகிறது. அது மெய்யோ, பொய்யோ, அல்லது, அந்த நாடுகளுக்குக் கொடுத்திருக்கும் சுதந்திரம் உண்மையானதோ அல்லது, வெறும் பகட்டானதோ, எப்படி இருந்தாலும் சரி; சுதந்திரம் என்று அறிவிப்பதற்காவது ஜப்பானுக்கு தைரியம் வந்தது. அந்த தைரியங்கூட நேச நாடுகளுக்கு வரவில்லை! வார்த்தையளவில் சுதந்திரம் கொடுக்கக்கூட நேச நாடுகள் நடுங்குகின்றன! மறந்துகூட சுதந்திரம் என்று உச்சரிக்கத் துணிவதில்லை! இந்த லட்சணத்தில் யுத்தத்துக்குப்பின் அச்சுநாடுகள் இதர நாடுகளுக்கு சுதந்திரம் கொடுக்கப்போகின்றனவாம்! இதை யாராவது நம்புவார்களா? நம்புவதற்குத் துளியாவது இடமிருக்கிறதா? கூரைமீதேறி கோழி பிடிக்க முடியாதவர்களா, வானத்தைப் பிளந்து வைகுண்டம் காட்டப் போகிறார்கள்? நெருக்கடியான இந்த சமயத்தில் சுதந்திரம் கொடுக்க முன்வராதவர்களா யுத்தம் முடிந்தபின் சுதந்திரம் கொடுக்கப் போகிறார்கள்?

பேசாமடந்தைகள்

* சிறு நாடாகிய லெபனுனுக்கு இருந்துவரும் ஆதரவுகூட இந்தியாவுக்குக் கிடையாது. இந்திய சுதந்திரமென்றால் எல்லா நாடுகளும் பேசாமடந்தைகளாய்விடுகிறார்கள்! ஆனால், லெபனுனைவிட இந்தியாதான் கேந்திர ஸ்தானமாக இருக்கிறது. ஜப்பானை முறியடிக்க இந்தியாவையே நேச நாடுகள் யுத்த தளமாக உபயோகித்து வருகின்றன. வேறு எந்த தேசத்தையும்விட இந்தியாவின் ஆதரவும், ஒத்துழைப்புமே நேச நாடுகளுக்கு ரொம்ப அவசியம்; என்றாலும், இந்தியாவுக்கு சுதந்திரம் கொடுக்க பிரிட்டன் தயாராக இல்லை; இந்தியாவின் சுதந்திர கோரிக்கையை ஆதரிக்க எந்த நேச நாடும் முன்வரவில்லை. ஆனால், இந்தியாவை வானமளாவத் தூக்கிவைக்கவோ எல்லா நாடுகளும் நான் முந்தி, நீ முந்தியென்று போட்டி போட்டுக்கொண்டு ஓடி வருகின்றன! வானத்தை வில்லாக வளைத்திடுவோம், கடல் மணலை கயிறாகத் திரித்துவிடுவோம் என்ற ஜம்பப் பேச்சுகளுக்கு மட்டும் குறைவே இல்லை! இந்தியா போலவே, சீனாவும் ஒரு முக்கியமான தேசந்தான். நேச நாடுகள் சீனாவுக்கு அளித்த உதவியென்ன? ஒரு சில அமெரிக்க விமானப் படையைத் தவிர வேறு உதவி கிடையாது; இந்த நிலைமையில் சீனாதான் என்ன செய்யும்? பலம் பொருந்திய ஜப்பானை அது எப்படி எதிர்த்து நிற்கும்? 1937ம் வருடத்திலிருந்து சீனா எப்படியோ ஜப்பானை எதிர்த்து வருகிறது; ஆனால், முடிவில் சீனாதான் கண்ட பலன் என்ன? நாசந்தான்! ஜப்பானியர் சீனாவை அடியோடு அழித்து வருகின்றனர்! இந்த நிலைமையில் நேச நாடுகளிடம் சீனு நம்பிக்கை இழந்து வந்ததில் ஆச்சரியமென்ன? நல்ல சமயத்தில் லார்ட் மௌண்ட்பேட்டன் சீனாவுக்குச் சென்றார்; ஷியாங்-கே-ஷேக்கைக் கண்டு பேசினார். இதனால் சீனாவுக்கு ஓரளவு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. இதைத்தவிர சீனாவுக்கு எப்படி போய் குவிந்துவிடவில்லை! சீனா சொந்த பலத்தை நம்பியே இந்தப் போராட்டத்தை தொடர்ந்து நடத்தி வருகிறது. பர்மா ரோட்டின் இணைப்பதற்கு, அஸாமிலிருந்து அமெரிக்கர் ஒரு ரோடு போட்டுள்ளனர். அந்த வேலையில் சீனத் துருப்புகளும் ஈடுபட்டு முன்னேறுகின்றன. இந்த சீனப் படைகள் பர்மாவுக்குள் சுமார் 20 மைல் முன்னேறியிருக்கின்றன. டாருங், சின்ட்வின் நதிகளின் வடபகுதியிலுள்ள பல கிராமங்களை கைப்பற்றின.

குள்ள நரி!

* ஆசையிருக்கு தாசில் பார்க்க, ஆனால், அம்சம் இருக்கு கழுதை மேய்க்க! ஜப்பானை அடித்து நசுக்கிவிட வேண்டுமென்ற ஆசைக்கு அளவே இல்லை! ஆனால், அதற்கு சக்தி வேண்டாமா? அந்த சக்தி எங்கிருக்கிறதோ தெரியவில்லை! எழுந்து வந்தேனே பார் என்று கால்கை சரியில்லாத நொண்டி உருட்டிக்கொண்டிருப்பதுபோல் உருட்டி என்ன பயன்? ஜப்பானியரிடமோ அந்த ஆடம்பரத்தையும், டாம்பிகத்தையும் காணோம். அவர்கள் பேசாமல் காரியத்தில் கண்ணாயிருக்கிறார்கள். பர்மா போராட்டம் இதோ! ஆரம்பிக்கப் போகிறோம், அதோ! ஆரம்பித்தாகிவிட்டது என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். இன்னமும் போராட்டம் தீவிரமாக ஆரம்பித்ததாகத் தெரியவில்லை. இரு சாராரும் வெடிகுண்டுகளைப் பரிமாறிக்கொள்ளுகின்றனர். சிறு கைகலப்புச் சண்டைகளையும், சலசலப்பையும் தவிர, பெரிய போராட்டம் இன்னமும் ஆரம்பிக்கவில்லை. ஆனால், ஜப்பானியக் குள்ள நரிகள் இந்த சலசலப்பைக் கண்டு அஞ்சிவிடாது என்பதை நேசநாடுகள் அறியவேண்டும்! சின் மலைகளின் வடபகுதியிலுள்ள நேச ராணுவத் தளங்களை பிடிக்க ஜப்பானியர் விடாமல் முயற்சித்தனர். ஆனால் தோல்வியடைந்தனர். ஜப்பானியருக்கு ஏராளமான உயிர்ச்சேதம் ஏற்பட்டது. எத்தனை பேர் மாண்டனரோ அது எமனுக்குத் தெரியும்! ரங்கூனுக்கு வடக்கே 40 மைல் தூரத்திலுள்ள பெகு ரயில்வே ஸ்டேஷனை நேச விமானங்கள் தாக்கின. பல தீக்கள் கிளம்பின. புகை வான மண்டலம் போய்ச் சேர்ந்திருக்கும்; அதில் சந்தேகமென்ன? நேச விமானங்கள் அரக்கான் மீதும், ஐராவதி நதிப் பிரதேசத்திலும் குண்டுகளை எறிந்து அதிகச் சேதத்தை

[12ம் பக்கம் பார்க்க]

வயிற்று வலி

உங்களை முறுகப் பிடித்து துன்புறுத்துகிறதா?

வயிற்று வலியின் பிடியினின்றும் தப்பித்துக் கொள்ளுங்கள். அசட்டையாயிருந்தால், வயிற்றில் விரணங்கள்கூட ஏற்படலாம்.

மக்லீன் ப்ராண்ட் ஸ்டமக் பௌடர்

உட்கொள்ளுங்கள். இந்த விசேஷமான மருந்து வயிற்று நோவுகளுக்கு அற்புத பயனளிப்பது. அமில மிகுதியை பிரதிகரித்து. இரைப்பையின் புண்பட்ட பாகங்கள்மீது லேசாகப் பரவி, புண் அதிகமாகாமல் பாதுகாக்கிறது. நோவைத் தேற்றி வாயுப்பொருமல், குமட்டல் இவற்றை விலக்கவும் செய்கிறது. ஆகாரம் உட்கொள்ள சுசமும் சந்தோஷமும் அளிக்கிறது. தக்ஷணமே ஒரு புட்டி வாங்குங்கள். புட்டிகளிலும் சுற்றிக் கட்டப்பட்ட தனி டோஸுகளடங்கின அட்டைப் பெட்டிகளிலும் விற்கப்படுகிறது.

எச்சரிக்கை!

மட்டரகப் போலிகளை விலக்குங்கள். ஒவ்வொரு பாக்கேஜின்மீதும் இதோ இந்த முத்திரையையும் ஆலெக்ஸ். ஸி. மக்ளினின் கையெழுத்தையும் கவனித்து வாங்குங்கள்.

M.P. 2595.

ANNOUNCEMENT



திரும்பவும் அடைப்பதற்காக கடைக்காரருக்கு இந்த மூடி தேவை.

காகிதமும் அட்டையும் குறைவாயிருப்பதால், நாம் சிக்கனமாயிருக்கவேண்டியது அவசியம். இனி நீங்கள் வாங்கும் கேரவன் சிகரெட்டுகளுக்கு மூடி கிடைக்காது. ஆனால், இந்த பிரஸித்தமான சிகரெட்டுகளின் குணமும், வாடை படாத தக்க பாதுகாப்பும் எப்போதும்போல் இருந்து வரும். இன்னம் ஒரு விஷயம். இப்போது சரக்குகளின் விலை அதிகமாயிருந்தாலும் கூட, கேரவன் உங்கள் சக்திக்கு உட்பட்ட, பிடித்தமான ரகமாகவே இருந்துவரும். இது எங்களுடைய தீர்மானம்.

சமாதான காலத்து மூடிகளுடன் மறுபடியும் உங்களுக்குக் கொடுக்கக்கூடிய நாளை நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.



நீங்கள் வாங்கும் கேரவன்களை இவ்விதம் வாங்கிக் கொள்ளுங்கள். வந்தனம்.

THE NATIONAL TOBACCO CO. OF INDIA LIMITED

ADVTG. CORPN. C.18



சும்மா கிடந்த சங்கை - - ஊதிக்கெடுத்தான் ஆண்டி!
கழுத்தை முறித்து குறுக்கை ஒடிக்கவில்லையா?
சமத்து இல்லை! - இதுதான் லட்சணம்!
உடனே கல்தா!

சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானும் ஆண்டி! வங்காளத்தில் ஏற்பட்டிருக்கும் பஞ்சத்தைப்பற்றியும், அங்கு பசி பட்டினியால் வாரமொன்றுக்கு சுமார் 50,000 மக்கள் செத்து விழுவதைப் பற்றியும் இந்திய சட்டசபையில் விவாதித்ததே தப்பு! சர்க்கார் அதைத் தடுத்திருக்கலாம்; எத்தனையோ தீர்மானங்களை சபைத் தலைவரும், வைசிராயும் தட்டிக் கழிக்கவில்லையா? தீர்மானங்களின் கழுத்தை முறித்து, குறுக்கை ஒடித்துப்போடவில்லையா? அதேபோல் வங்கப் பசிபட்டினியைப்பற்றிய தீர்மானத்தையும் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள மறுத்திருக்கலாம். இந்திய சட்டசபையில், ஏன், இந்திய பார்லிமெண்டில் அதைப்பற்றி விவாதித்து என்ன பலனைக் கண்டார்கள்? சர்க்கார்தான் என்ன சாதித்துவிட்டார்கள்; அல்லது, சாதிக்கப் போகிறார்கள்? சர்க்கார் மெம்பர்களும், சட்டசபை அங்கத்தினர்களும் தொண்டையைக் கிழியக் கத்தினதுதான் மிச்சம்! அவையாக் குரல் ஒழிய அங்கு ஒன்றுமில்லை! இதனால், கை கண்ட பலன் ஒன்று உண்டு; அது என்ன தெரியுமா? ஒன்றும் அறியாத மக்கள், இந்தியாவின் விசேஷமாக வங்காளத்தின் நிலைமையை நன்கு அறிந்துகொண்டார்கள். சர்க்காரின் துரோகத்தையும், கையாலாகாத்தனத்தையும் நன்றாக தெரிந்துகொண்டார்கள்! வங்காளத்தில் பல ஆயிரக்கணக்கான மக்கள் சாவதைக் கண்டு அவர்கள் ரத்தம் கொதிக்காமலிருக்குமா? உள்ளத்திலிருந்து ஆவேசம் பொங்கிவராமலிருக்குமா? இதற்குக் காரணம் யார்? சர்க்கார்தான். சட்டசபை விவாதம் நடைபெறாமலிருந்தால் இதை பாமர ஜனங்கள் அறிந்திருக்கவேமாட்டார்கள்.

உடனே கல்தா

* துடைப்பத்துக்குப் பட்டுக் குஞ்சம் கட்டியமாதிரி, ஒரு இழவுக்கும் உதவாத இந்திய சட்ட சபையை இந்திய பார்லிமெண்ட் என்று கௌரவமாகச் சொல்லிக்கொள்ளுகிறார்கள்! அந்தப் பார்லிமெண்டில் சாதிப்பதோ ஒன்றுமில்லை. கடனைக்கழிக்க அங்கத்தினர்கள் போய்ச் சொகுசாக உட்காருகிறார்கள்; சுகமாகக் காற்றுவாங்குகிறார்கள். தூங்கி விழுகிறார்கள்; பேசமுடிந்தால், அல்லது, விஷயந் தெரிந்தால் பேசுகிறார்கள். எல்லாம் பேச்சோடுசரி; காரியம் ஆவதே இல்லை. சர்க்காருக்கு ஆகவேண்டிய காரியமிருந்தால் கண்மூடித்திறப்பதற்குள் முடிந்துவிடும்; அதை இந்திய பார்லிமெண்டிலுள்ள எல்லா அங்கத்தினர்களும் சேர்ந்து எதிர்த்தாலுஞ்சரி, ஒரு வெள்ளை மாக்ஸ்வெல்லோ, அல்லது, ஒரு ரெய்ஸ்மனோ சுலபமாகச் சாதித்துவிடுவார், இதுதான் இந்தியப் பார்லிமெண்டின் லட்சணம்! இந்த லட்சணத்திலுள்ள பார்லிமெண்டில் தான் வங்க அலங்கோலத்தைப்பற்றி விவாதித்தனர்! அங்கத்தினர்கள் காட்டசாட்டமாகத்தான் பேசினார்கள்! ஆனால், எல்லாம் எருமைமீது மழை பெய்த மாதிரிதான்! பிரிட்டிஷாருக்கு இந்த யுத்தத்தில் இந்தியா ஏராளமாக உதவி செய்துவருகிறது. இந்தியர் லட்சக்கணக்கில் பசி பட்டினிகிடந்து மடியும்போது, பிரிட்டிஷார் உணவாவது கொடுத்து உதவினால் என்ன? பிரிட்டிஷாரிடமே உணவு இல்லையென்று வைத்துக்கொள்ளுவோம்; வேறு நேசநாடுகளிடமிருந்தாவது உணவுப்பொருள்களை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யலாமல்லவா? உணவுப் பொருள் ஏற்றுமதி செய்ய கப்பல் இல்லையென்று கையை விரிக்கிறார்கள்? பிரிட்டனில் மக்கள் பசியால் மடிந்தால் பிரிட்டிஷ் சர்க்கார் சும்மா பார்த்துக் கொண்டிருப்பார்களா? உடனே கப்பல் கப்பல்களாக உணவு வந்து சேர்ந்துவிடாதா? அப்படியே உணவு வந்து சேராவிட்டால், சர்ச்சில் துரை முதன்மந்திரியாக இருக்கமுடியுமா? உடனே அவருக்குக் கல்தா கொடுத்து வெளியில் அனுப்ப மாட்டார்களா? சுமார் 40 கப்பல்கள் பிரிட்டிஷார் தேவைக்கென்று இந்தியாவிலிருந்து பிரிட்டனுக்குப் போயிருக்கிறது. அந்தக் கப்பல்களில் 6 கப்பல்களையாவது இந்தியாவுக்கு உணவுப்பொருள்களை ஏற்றிக்கொண்டுவர பிரிட்டிஷார் அனுமதி அளித்தால் என்ன; அல்லது, இந்திய சர்க்காராவது பிரிட்டனைக் கேட்டால் என்ன? இரு சர்க்கார்களும் யாருக்கு வந்த விருந்தோவென்று வாளாவிருந்துவிட்டனர்! இந்திய கப்பல்களை உபயோகிக்க இந்தியருக்கு உரிமை இல்லையா? இதை ஹூசேய்ன்பாய் லால்ஜி மண்டையில் அடித்தாற்போல் எடுத்துச் சொன்னார். ஆனால், சர்க்காரின் மண்டையோ மறத்துப் போயிருக்கிறது!

விட்டில் பூச்சிகளா?

* மனமிருந்தால் இடமுண்டு; வங்காளத்தில் மாண்டு விழும் மக்களுக்கு உயிர்ப் பிச்சை கொடுப்பதென்றால், சர்க்கார் எப்படியும் உதவிக்குப் போயிருக்கலாம்; ஆனால், சர்க்காருக்கு அந்த எண்ணமுமில்லை; ஆத்திரமுமில்லை. வங்காளத்தில் ஏதோ வண்டுகள் அல்லது விட்டில் பூச்சிகள் செத்து விழுகின்றனவென்று சர்க்கார் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள் போலும்! இந்தியாவெங்கும் அடக்குமுறையை அமுலுக்குக்கொண்டுவருவதென்றால், ஒரு நிமிஷத்தில் இந்தியா பூராவும் காரியங்கள் துரிதமாக நடக்கின்றன! நினைத்த மாத்திரத்தில் பல ஆயிரக்கணக்கான தலைவர்களையும், தொண்டர்களையும் சிறைக்குள் தள்ளிவிடுகிறார்கள்! ஆனால் வங்காளத்தில் அநியாயமாக சாவும் மக்கள் உயிர்களைக் காப்பாற்ற சர்க்காருக்கு சமத்து இல்லாது போயிற்று! வங்காளத்தில் பல ஆயிரக்

[அடுத்த பக்கம் பார்க்க.]

இந்தியாவுக்கென்றே தயாரிக்கப்பட்டது.

சரியான நேரத்தை காட்டுவதில் வெஸ்ட் எண்ட் வாட்சுகளின் நிகரற்ற தரத்தைப் பற்றி நாங்கள் பெருமையடைகிறோம். கொடுக்கும் பணத்திற்குத் தக்க மதிப்புள்ள வெஸ்டு எண்ட் வாட்சுகளை செய்வதில், உயர்ந்த வேலைப்பாடும் சிறந்த சாமான்களும் ஒன்று சேர்ந்திருப்பதற்கு இதுவே அடையாளம். கடும் சீதோஷ்ண நிலைமைகளிலும் சிறந்த சேவை செய்து வருவதற்கும் இது அடையாளம். உண்மையாகவே எல்லா வெஸ்டு எண்ட் வாட்சுகளும், இந்தியாவின் நிலைமைக்கு ஏற்றதாக இருக்கும்படியே செய்யப்படுகின்றன.



நியூ காஸ்பர் "E"
தனிச் சிறப்புள்ள 15 ஜுவல் கடிகாரம்

நிக்கல் ஸில்வர் கேஸ்	ரூ. 62
பேடன்ட் எவர்ப்ரைட்ஸ்டீல்	,, 71
18 காரட் கட்டித் தங்கம்	,, 197

ரேடியம் எண்களும், முள்களும் இருமாடல்களுக்கும் ரூ. 3. அதிகம்.



'கேட் ஓப் ரெக்டாங்குலர்'
டிலக்ஸ் தரமுள்ள 16 ஜுவல் கடிகாரம்
18 காரட் கட்டித் தங்கம் ரூ. 304

இறக்குமதி ஒழுங்கில்லாமையால் எல்லாமாதிரிகளையும் அனுப்ப இயலாமற்போகலாம். ஆனால், ஸ்டாக்குகள் உள்ளவரை சப்ளை செய்ய முயற்சிக்கிறோம்.

வெஸ்ட் எண்ட் வாட்சு கம்பெனி,
பம்பாய். :: கல்கத்தா.

WEST END WATCH Co
BOMBAY CALCUTTA

நீண்ட காலம் உபயோகிக்கக் கூடிய
"எச். எம். வி." ஹைபிடெலிடி ஊசிகள்
10 ஊசிகளடங்கிய பாக்கெட் ஒன்றின் விலை ரூ. 2-4.

● ஒரு ஊசியினால் பல ரிகார்டுகளை பாட வைக்கலாம்.

சங்கநாதம்

கணக்கான மக்கள் சாவது தெரியாமலா இருக்கிறது? சர்க்காருக்கு அதை அறிய கண்ணில்லையா? கண் பொட்டையா? தென்னை மரத்தில் தேள்கொட்ட குட்டிச் சுவரில் நெரிகட்டியதாம்; வங்கப் பஞ்சத்துக்கு மகான் அமெரி என்னமோ பித்துக்கொள்ளிக் காரணம் சொன்னர்! இந்தியாவில் ஜனத்தொகை அதிகரித்துக்கொண்டு வருகிறதாம்! இந்தியாவில் அடிக்கடி பஞ்சமேற்படுவதற்கு இதுதான் காரணமென்று நாக்கில் நரம்பின்றிக் கூறினர்! சென்ற 3 நூற்றாண்டுகளில் இந்தியாவில் ஜனத்தொகை 4மடங்கு அதிகரித்திருக்கிறது. பிரிட்டனில் ஜனத்தொகை 8மடங்கு அதிகரித்திருக்கிறது. ஜனத்தொகை அதிகரித்ததால் பிரிட்டனில் மக்கள் பட்டினி கிடந்து செத்தார்களா; அல்லது, அவர்களைப் பிரிட்டிஷார் பட்டினி போட்டுக்கொல்லுகிறார்களா? ஜனத்தொகை அதிகரித்தால் மக்கள் பட்டினி கிடந்து சாகவேண்டுமென்று கட்டாயமா? அல்லது அது தான் அமெரியின் அபிப்பிராயமா?

குட்டிக்கரணம் போட்டாலும்!

* இந்திய மக்களின் சுயமரியாதையையும், கௌரவத்தையும் பாதுகாக்கச் சர்க்காரால் முடியவில்லையென்றால், அநியாயமாக மடியும் மக்கள் உயிர்களையாவது பாதுகாத்திருக்க வேண்டாமா? இன்று இந்தியாவில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடிக்குப் பிரிட்டிஷாரும், பிரிட்டிஷ் ஏஜண்டுகளாகிய இந்திய சர்க்கார் மெம்பர்களுமே காரணமாவார். கிராமவாசிகள் தானியங்களை விற்கக் கூடாதென்று காங்கிரஸ்காரர் சொன்னதினலேயே இந்தப் பஞ்சம் ஏற்பட்டுவிட்டதாக சர். ஏ. ராமசாமி முதலியார் பேசினர். காங்கிரஸ்காரர் அவ்வாறு பிரசாரஞ்செய்ததில் தவறு என்ன? அவர்கள் அவ்வாறு பிரசாரஞ் செய்திருக்காவிட்டால், இன்று இந்தியாவிலுள்ள 8லட்சம் கிராமங்களிலுமுள்ள ஏழை கிராமவாசிகள் பசி பட்டினி கிடந்து செத்திருப்பார்கள்! வங்காளத்தைப்போல் எத்தனையோ வங்காளங்கள் ஏற்பட்டிருக்குமென்று, அப்துல் கய்யூம் முதலியாருக்கு கன்னத்தில் அறைந்தாற்போல் பதில் கொடுத்தார்! இன்று இந்தியாவை வாட்டும் பஞ்சம் ஒழியவேண்டுமா, நாட்டில் ஏற்பட்டிருக்கும் அரசியல் நெருக்கடி தீரவேண்டும்; சர்க்கார் சிறையிலிருக்கும் காந்திஜியையும், காங்கிரஸ் தலைவர்களையும் விடுதலை செய்யவேண்டும். காங்கிரஸ் தலைவர்களுடன் ஒரு சமரசஞ் செய்துகொண்டு, காங்கிரஸ் மாகாணங்களில் ஏற்படுமேயானல், இந்த நெருக்கடிகள் யாவும் உடனே தீர்ந்துவிடும். இதைத் தவிர வேறு வழியில்லை; சர்க்கார் என்னதான் குட்டிக்கரணம் போட்டாலும் நெருக்கடியைத் தீர்த்துவைக்க முடியாது!

சுக்கல் நூறு!

* அரசியல் நெருக்கடி, பஞ்சம், பட்டினி, முதலிய கொடுமைகளுடன், ரயில்வே விபத்துகளும் மக்கள் உயிர்களைக் கொள்ளை கொண்டு போகின்றன! சமீபத்தில் விழுப்புரத்துக்குச் சமீபத்திலுள்ள சேர்ந்தனூர் என்ற சிறு ஸ்டேஷனில் ஏற்பட்ட ரயில்வே விபத்து மக்களைத் திடுக்கிடச் செய்திருக்கும்! அங்கு ரயில்வே லைன் மாறியிருந்து இஞ்சின் நழுவிவிட்டது. இஞ்சினும் நாலைந்து வண்டிகளும் ஒன்றுடன் ஒன்று மோதி சுக்கல் நூருகிவிட்டது! அந்த விபத்தில் சுமார் 39 பேர் மாண்டனர்; 11 பேர் படுகாயமடைந்தனர். இன்னும் 89 பேர் காயமடைந்தனர். இவ்வித விபத்துக்கள் அடிக்கடி ஏற்படாது போயினும், இவ்வித பயங்கரமான விபத்துகள் நேரிடா வண்ணம் தடுக்க வேண்டும்.

ஏன், நம்ம பள்ளிக்கூட வாத்தியார்தான்!

தனக்கும், தன் குடும்பத்திற்கும் இன்ஷ்யூரன்ஸ்தான் சிறந்த பாதுகாப்பு என்பது அவருக்கு வெகு நாளாய் தெரியும். ஆனல் அவருடைய சொல்ப வருமானம் அவர் இன்ஷ்யூர் செய்து கொள்ள தடையாக இருந்தது.

இதை யோசித்தே நாங்கள் அவர் சொல்ப வருமானத்துக்குத் தகுந்தபடி, சிறு தொகைகள் கட்டுவதற்கு அனுகூலமாக ரூ. 500-க்கும், அதற்கு குறைந்த தொகைகளுக்கும் இன்ஷ்யூரன்ஸ் பாலிஸிகள் வெளியிடுகிறோம்.

யுனைடெட் இந்தியா

பிராவிடெண்ட் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,

யுனைடெட் இந்தியா லைப் பில்டிங்ஸ்,
எஸ்பிளனேட், மதராஸ்.

யுத்தத்திற்குப் பிறகு மேற்கொண்டு என்ன?

யுத்தம் முடிந்ததும் நீங்கள் என்ன செய்ய நினைத்திருக்கிறீர்கள்? பணம் சேர்த்துவைத்திருப்பவர்களுக்கு நல்ல சந்தர்ப்பங்கள் காத்திருக்கும். உதாரணமாக இருந்ததொழில்களிலிருந்து வேறு நல்ல தொழில்களுக்குப் போகலாம். லாபகரமாகப்பொருள்களை வாங்கலாம். மலிவாக வீடுகட்டலாம்; அல்லது சிரமந்தீர நல்ல ஓய்வு எடுத்துக்கொள்ளலாம். இப்போது விலைவாசிகள் அதிகமாய் இருக்கின்றன. ஆகையால் மிக அவசியமானவைகளை மாத்திரம் வாங்கிக்கொண்டு பிற்காலத்தில் விலைகள் குறைந்தவுடன் வாங்குவதற்காக எவ்வளவு பணத்தை சேர்த்து வைக்கமுடியுமோ அவ்வளவு சேர்த்து வைப்பதுதான் புத்திசாலித்தனம். பணம் சேர்த்து வைப்பதற்கு இப்பொழுதே ஆரம்பியுங்கள்!

எதிர் காலத்துக்காக சேர்த்து வையுங்கள்.

மதிப்பு குறைந்து போகக்கூடியவைகளில் நீங்கள் சேர்த்துவைத்த பணத்தைப்போட்டு வைக்காதீர்கள்! இப்போது தங்கம், வெள்ளி, நகை, நிலம், கட்டிடம், இதரசாமான்கள் இவற்றின் மதிப்பு அளவுக்கு மிஞ்சி அதிகப்பட்டிருக்கின்றது. அவைகளில் நீங்கள் பணத்தைப்போட்டு வைத்தால் விலைகள் திடீரென்று குறைந்துவிடும்போது உங்களுடைய பணத்தின் பெரும்பகுதி அழிந்துபோய் விடும்.

இங்கு குறிப்பிட்ட முதலீடுகள் லாபகரமும் பாதுகாப்பானவையுமாகும்!

நீங்கள் சேர்த்துவைக்கும் பணம் பாதுகாப்பாகவும் நிரந்தரமாகவும் இருக்கவேண்டுமானல் கூட்டுறவு சங்கம், இன்ஷூரன்ஸ், பாங்கி சேமிப்பு நிதி, போஸ்டாபீஸ் சேமிப்புநிதி, அல்லது எல்லாவற்றிலும் மேலானதாகிய அரசாங்கக்கடன் பத்திரங்கள் சேவிங்க்ஸ் சர்ட்டிபிகேட்டுகள் இவைகளில் போட்டுவையுங்கள்.



தேசீயப் போர் முனையின் தேசீய வேண்டுகோள்.

CPU 301. TM.

தமிழ் மணி

சென்னை - சுபானுஹு கார்த்திகைமீ 6உ (21-11-1943)

ஒன்பதாம் ஆண்டு

"தமிழ் மணிக்கு" இது ஒன்பதாம் ஆண்டு. கடந்த 8 வருடங்களாகத் தமிழ் மணி எத்தனையோ எச்சரிக்கைகளையும், இடையூறுகளையும் சமாளித்துக்கொண்டு வெளி வந்தது. இனிமேலும் வெளிவந்தே தீரும். இந்த எட்டு வருட காலத்தில் தமிழ் மணி தேசத்திற்கும், குறிப்பாக தமிழ் நாட்டிற்கும் செய்துவந்த சேவையை தமிழ் அன்பர்கள் நன்கறிவார்கள். அதே சேவையில் தமிழ் மணி என்றும் ஈடுபட்டிருக்கும்; அதில் சந்தேகம் வேண்டியதில்லை.

"மணி"யின் கொள்கையைப்பற்றி அதிகம் எழுதத் தேவையில்லை; தமிழ் மக்கள் எல்லோருக்கும் அதன் கொள்கை நன்கு தெரியும். அந்தக் கொள்கையினின்றும் அது அணுவளவும் நழுவாது என்பது திண்ணம்.

தமிழ் மணியை தமிழ் அன்பர்கள் எவ்வளவு ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் இதுவரையில் ஆதரித்து வந்தார்களோ, அதேபோல் இனிமேலும் ஆதரித்து வருவார்கள் என்பதில் துளியும் சந்தேகமில்லை. தமிழ் மக்கள் ஆதரவு இருக்கும் வரையில் மணி எதற்கும் அஞ்சாது; அச்சமின்றி மக்களுக்குத் தொண்டு செய்து வருமென்பது நிச்சயம். அன்பர்கள் எல்லோருக்கும் எமது நன்றி.

கோவிந்தா!

இந்தியாவில் ஏற்பட்டிருக்கும் உணவு நெருக்கடியைப் பற்றியும், வங்காளத்தில் ஏற்பட்டிருக்கும் பஞ்சத்தைப்பற்றியும், இந்திய சட்டசபையில் 5 தினங்களாக விவாதம் நடந்தது. உணவுப் பஞ்சத்துக்கு சர்க்காரே காரணமென்று எல்லோரும் ஒருமிக்கக் கண்டித்தார்கள். இதுசம்பந்தமாக விசாரணை நடத்த கமிஷன் ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்று தீர்மானம் வந்தது. அந்தத் தீர்மானம் கூடக் கோவிந்தா ஆகிவிட்டது! அது கோவிந்தா ஆனதே மேல்; ஏன்? அந்தக் கமிஷனால் என்ன பயன்? பல ஆயிரக்கணக்காக, ஏன், லக்ஷக்கணக்காக மாண்ட ஏழை மக்களின் உயிர்களை அந்தக் கமிஷனால் திரும்பிக் கொண்டு வந்துவிட முடியுமா? முடியாது. மேலும், இந்தப் பஞ்சத்துக்குக்காரணம் யார் என்பதை அந்தக் கமிஷன் கண்டுபிடிக்கப் போவதுமில்லை. சர்க்காரே நியமிக்கப்போகும் அந்த கமிஷன், சர்க்கார் மீது குற்றஞ் சொல்லுமா? மாகாண சர்க்கார்களே இந்தப் பஞ்சத்துக்கு காரணம் என்று சொல்லி, இந்தியா சுயராஜ்யத்துக்கு லாயக்கில்லை என்ற முடிவுக்குத்தான் கமிஷன் வரும். அந்த முடிவை பிரிட்டன் இந்தியாவுக்கு விரோதமாகஉபயோகித்துக்கொள்ளக் கூடும். ஆகவே, அவ்வித கமிஷன் ஏற்படுவதிலும், ஏற்படாலிருப்பது நல்லதல்லவா? பஞ்சத்துக்குக் காரணம் யார் என்பது பகிரங்க ரகசியம். பிரிட்டிஷ் சர்க்காரும், இந்திய சர்க்காருமே பஞ்சத்துக்கு முக்கிய காரணம். இதற்கு ஜோசியம் பார்க்க வேண்டியதில்லை; அதைப்பற்றி விசாரிக்க ஒரு கமிஷன் வேண்டியதுமில்லை. சர்க்கார் இன்று மறுக்கலாம்; ஆனால், என்றைக்காவது இந்த உண்மை வெளியாகியே தீரும். சர்க்காருக்கு ஏஜண்டுகளாக இருந்து, சர்க்காருக்குத் தூபம் போடும் சர்க்கார் மெம்பர்கள் முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைத்தபோதிலும், அவர்கள் மனச்சாட்சி உண்மையை இடித்துக் கூறியிருக்குமென்பதில் சந்தேகமில்லை.

குப்பைத் தொட்டிக்கே!

கொள்ளை லாபம் அடிப்பவர்களையும், உணவுப் பொருள்களை பதுக்குகிறவர்களையும் தண்டிக்க சட்டம் இருக்கிறது. ஆனால், சர்க்காரே கொள்ளையடிக்க முற்பட்டால், அந்தச் சட்டத்தால் பயன் என்ன? அந்தச் சட்டத்தைக் கொண்டு சர்க்காரைத் தண்டிக்க முடியுமா? வங்கத்தில் தினசரி ஆயிரக்கணக்கான மக்கள் பசி பட்டினி கிடந்து மடிவதைக்கண்டும் ஸிந்து சர்க்கார் வங்கத்துக்கு உணவுப் பொருள்கள்மீது அதிக லாபம் வைத்து விற்றார்களாம்! ஸிந்து சர்க்கார் மட்டுமா? இந்திய சர்க்கார்கூட அதிக விலைக்கு உணவுப் பொருள்களை விற்று கோடிக்கணக்கில் லாபந் திரட்டியதாகத் தெரிகிறது! இந்தச் சட்டங்களால் என்ன பயன்? இது வேலியே பயிரை அழிப்பது போலல்லவா இருக்கிறது? பயனற்ற சட்டங்களை சுருட்டி மடக்கிக் குப்பைத் தொட்டியில் போட்டால் தேவலை! குப்பைத் தொட்டிக்கே அவை லாயக்கானவை!

முதல் பிரசாதம்!

சென்னை மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்து, கள்ளரக்கனுக்கு ஆசிர்வாதம் கொடுக்க சென்னை கவர்னர் தீர்மானித்துவிட்டார்! அதற்காக அவர் வைசிராயின் அனுமதி கோரினார்; வைசிராய் பிரபுவும் அனுமதி கொடுத்து விட்டார். ஆகவே, கள்ளரக்கன் வைசிராய், கவர்னர் பிரான்களின் ஆசிர்வாதம் பெற்று, அடுத்த ஜனவரி மாத ஆரம்பத்திலிருந்து நான்கு ஜில்லாக்களில் மீண்டும் ஆனந்தத்தாண்டவமாடப் போகிறான்! அவனுடைய கோர தாண்டவம் கண்ராவிக் காட்சியாக இருக்குமென்பதில் சந்தேகமில்லை! புதிய வைசிராய் லார்டு வேவல் இப்பொழுதுதான் பதவிக்கு வந்தார்; வந்ததும் அவருடைய முதல் பிரசாதம் இதுதான்! செத்து ஒழிந்த கள்ளரக்கனுக்கு மீண்டும் புத்துயிர் அளித்திருக்கிறார். அவருடைய முதல் பிரசாதத்தை கண்டு சர்க்கார் அதிகாரிகளும், குடிகாரர்களும் கும்மாளம் போடலாம்! ஆனால், சுமார் 20 லக்ஷம் மக்கள் இரத்தக் கண்ணீர் வடிக்கப்போகிறார்கள்! இதுவரையில் வாய்க்கும் கைக்குமாக வாழ்ந்துவந்த ஏழைக் குடும்பங்கள் பல இனிமேல் பசி பட்டினி கிடந்து வருந்துமென்பது திண்ணம்! இருந்திருந்தும் வேவல் பிரபு இத்தகைய முதல் பிரசாதத்தையா கொடுக்க வேண்டும்? அது வைசிராயின் துரதிர்ஷ்டந்தான்! ஆனால், கள்ளரக்கனுக்கு அதிர்ஷ்டமிருக்கும்போது, வைசிராய்க்கு துரதிருஷ்டம் வந்துதானே தீரவேண்டும்!

மணியோசை

மிஸ்டர் டாம் டிரிபர்க்,

லண்டன்.

துரையே,

ஜாடிக்கு ஏற்ற மூடி என்பார்கள்; அதுபோல சர்ச்சிலுக்கு ஏற்ற அமெரி! அப்பேர்ப்பட்ட அமெரியை, சர்ச்சில் எப்படிக் கைவிடுவார்? பிரிட்டிஷ் மந்திரி சபையில் மாற்றம் ஏற்படும்போது, அமெரி பதவியிலிருந்து போகக் கூடுமென்ற வதந்தி பலமாக இருந்தது. ஆனால், அந்த வதந்தியெல்லாம் பொய்யாகிவிட்டது; சர்ச்சில் அவருக்குச் சீட்டு கொடுக்காமல் வைத்துக் கொண்டார். அரசியல் வகையில் சர்ச்சிலின் கோமாளிக்கூத்து எல்லையை எட்டிவிட்டது என்று நீங்கள் சொல்லுகிறீர்கள்! மெய்தான்; சர்ச்சிலின் கூத்து இது மட்டுமல்ல; இன்னமும் அவர் எத்தனையோ கூத்துக்கள் நடத்திக் காட்டப் போகிறார்! அத்தகைய சர்ச்சிலை நீங்கள் இன்னமும் பதவியில் வைத்துக்கொண்டுதானே இருக்கிறீர்கள்? சர்ச்சில் முதன் மந்திரியாக மட்டும் இருக்கவில்லை; இன்று அவர் ஜனநாயகப் போர்வைக்குள் ஒரு சர்வாதிகாரியாகவும் இருக்கிறார்! ஆனால், அவருக்குச் சீட்டுக் கொடுத்து அனுப்ப பிரிட்டிஷ் மக்களுக்குத் தைரியமில்லை. இப்பேர்ப்பட்ட பிரிட்டிஷார்தானா உலகில் ஜனநாயகத்தை நிலைநாட்டப் போகிறார்கள்? எல்லாம் சுத்த மோசடி! உலகத்தை ஏமாற்றும் வித்தை!

டிங்-டாங்

கத்தே ரங்கய்ய நாயுடு,

புது-டில்லி,

தலைவரே,

தேச சேவையில் மட்டுமல்ல, சாப்பாட்டு சேவையிலும் நீங்கள் கைதேர்ந்தவர்கள்போல் தெரிகிறது! சர்க்காரின் உணவு கட்டுப்பாட்டையும், தற்காலம் ஏற்பட்டிருக்கும் உணவுப் பஞ்சத்தைப் பற்றியும் டில்லி சட்டசபையில் பேசியபோது, சர்க்காரின் போக்கை ரொம்பத் தமாஷாகக் கண்டித்தீர்கள். "ஒரு ஆளுக்கு ஒரு ராத்தல் உணவுப்பொருள் கொடுப்பது போதாது. எனக்கு வயது 75-க்கு மேலாகிறது. ஒரு ராத்தல் உணவுப்பொருள் எனக்கு ஒருவேளை சாப்பாட்டுக்குத்தான் போதும்" என்று சொன்னீர்கள். ரொம்ப சரி; சர்க்காரின் இந்த உணவுக் கட்டுப்பாடு இன்னம் சிறிதுகாலத்துக்கு நீடிக்குமேயாயின், இந்திய மக்கள் பட்டினி கிடந்து சாக வேண்டியதுதான்! உண்டவன் உரஞ் செய்வான் என்று சொல்லுவதுண்டு. நீங்கள் நன்றாக உண்டு வளர்ந்ததால் 75 வயதிலும் "கொட்டாப்புளியாட்டம்" இருக்கிறீர்கள்! உங்கள் பேச்சைக் கேட்பவர் சிலர் உங்களைச் சாப்பாட்டு ராமன் என்று நினைக்கலாம்! ஆனால், நான் அப்படி நினைக்கவே இல்லை. உண்பது நாழி, உடுப்பது நான்கு முழம் என்று கம்பர்கூடப் பாடி இருக்கிறார். தமிழ் கவிஞர், கம்பரின் திருவாக்கை நீங்கள் இந்திய சட்டசபையில் கொண்டு போய் அரங்கேற்றியதற்கு உங்களுக்கு அனந்தகோடி நமஸ்காரம்!

டிங்-டாங்

சர். ரெய்ஸ்மென்,

புது-டில்லி.

நிதி மெம்பரே,

உணவுப் பொருள் விற்பனையில் மத்திய சர்க்கார் மணங்கு ஒன்றுக்கு ரூ. 1-2-0 விதம், மொத்தம் சுமார் 1 கோடி ரூபாய் லாபமடித்ததாக சர்தார் சாந்தசிங் இந்திய சட்டசபையில் சொன்னார்; இதைக் கேட்டதும் உங்களுக்கு மூக்கின் மேல் கோபம் வந்துவிட்டது! மத்திய சர்க்கார் லாபமடித்ததாக சர்தார் சாந்தசிங் நிரூபித்தால், லாபமடித்த ஒவ்வொரு ரூபாய்க்கும் 10 ரூபாய் விதம் கொடுக்கத் தயார் என்று நீங்கள் சொன்னீர்கள். உங்கள் சவாலை சர்தார் சாந்தசிங் ஏற்றுக்கொண்டாரோ, இல்லையோ அது எனக்குத் தெரியாது. சர்க்கார் அவ்வாறு லாபமடிக்கவில்லை என்று நீங்கள் சொல்லுகிறீர்கள்; அப்படியானால் நீங்கள் ஏன் அதை நிரூபிக்கக்கூடாது? சர்க்கரைப் பானைக்குள் கைவிட்டபின் சும்மா போவானா? நிதி சம்பந்தமாக சர்க்கார் என்னென்ன திருகு தாளம் செய்து வருகிறார்களோ யார் கண்டது? சர்க்கார் கணக்குக் காட்டுகிறார்களா? இல்லையே; அப்படியே கணக்குக் காட்டுகிறார்களென்றே வைத்துக்கொள்ளுவோம்; அது யார் தயாரிப்பு? உங்கள் தயாரிப்புத்தானே! ஆகவே, உங்கள் சவால் நியாயமானதல்ல; சர்தார் சாந்தசிங் சுட்டிக் காட்டியது உங்களுக்கு ஆக்ரோஷத்தை உண்டுபண்ணியிருக்குமேயானால், நீங்கள் உடனே உள்ள கணக்கை வெளியிடுங்கள்; மத்திய சர்க்கார் கொள்ளையடிக்கவில்லையென்பதை தகுந்த ஆதாரங்களுடன் நிரூபியுங்கள்; அது உங்கள் கடமை.

டிங்-டாங்

கோவிந்த தேஷ்முக்,

புது-டில்லி.

காங்கிரஸ் பக்தரே,

"இந்தியாவில் இன்று ஏற்பட்டிருக்கும் உணவு நெருக்கடிக்கும், வங்காளத்தில் ஏற்பட்டிருக்கும் பஞ்சத்துக்கும் காரணம் சர்க்காரே; ஏற்கனவே தயாரித்த திட்டப்படி இந்தப் பஞ்சம் உண்டாக்கப்பட்டிருக்கிறதென்றே சந்தேகிக்கிறேன்! அது மட்டுமா? இந்தப் பஞ்சம் ஏதோ பழிவாங்கும் எண்ணத்து

[8ம் பக்கம் பார்க்க.]

புதிய தினசரி

சீக்கிரமாக ஆரம்பிக்கப்போகும் புதிய தமிழ் தினசரிக்கு என்ன பெயர் கொடுக்கலாம் என்பதை பொது ஜனங்களிடம் ஆலோசிக்க விரும்புகிறேன். ஆகவே, உங்களுக்கு தோன்றும் பெயர்களை எழுதியனுப்பக் கோருகிறேன்.

டி. எஸ். சொக்கலிங்கம் பிள்ளை,
321, G ஸான்தோம் ஹைரோட்,
மைலாப்பூர், சென்னை.

செட்டிநாட்டில் பெண் கல்வி

காரைக்குடி ஸ்ரீ மீனுக்ஷி உயர்தர பெண் பாடசாலை

வெள்ளிவிழா அறிக்கை

இப்பொழுது வெள்ளி விழாக் கொண்டாடப் பெறும் காரைக்குடி ஸ்ரீ மீனுக்ஷி பெண் பாடசாலை [illegible]

தோற்றமும் வளர்ச்சியும்

1912-ல் இந்தப் பாடசாலை [illegible]

[illegible]

கட்டிடங்கள்

[illegible]

வகுப்புகள்

[illegible]

மாணவிகள் தொகை

[illegible]

ஆசிரியர்கள்

[illegible] (Provident Fund) [illegible]

பாடங்கள்

[illegible]

கைத்தொழிற் பயிற்சி

[illegible]

இந்தப் பள்ளிக்கூடம் ஒரு பொருட்காட்சியை நடத்திற்று. தங்கள் குழந்தைகள் செய்த பொருள்களை நேரில் கண்டு தாய்மார்கள் மிக அகமகிழ்ந்தனர் என்று சொல்லவேண்டியதில்லை.

நூற்குழுமமும் பள்ளிக்கூடமும்

இரண்டாவது ஆண்டிலேயே 269 புத்தகங்களுடன் பாடசாலை நூற்குழுமம் நிறுவப்பெற்றது. ஆண்டுதோறும் புதிது புதிதாகப் புத்தகங்கள் சேர்க்கப்பெற்றன. சமீப காலத்தில், படங்களுடன் கூடிய சகல கலா நிகண்டுகளும் (Encyclopaedia) பல நாடுகளையும் பல நாட்டு மக்களையும் பற்றிய (Lands and Peoples) நூல்களும் சேர்க்கப்பட்டுள்ளன, இன்று இந்நூற்குழுமத்தில் மொத்தம் 1887 புத்தகங்கள் இருக்கின்றன. அறிவைப் பெருக்கவும், வாழ்க்கையின் லட்சியத்தை விரிவுபடுத்தவும் மாணவிகள் இதனைப் பயன்படுத்துகின்றனர்.

திரு. மெ. செ. மெ. மெ. சொக்கலிங்கம் செட்டியார், ஸ்தாபகர்.

1925-முதல் இருந்துவரும் படிப்புக்கூடம் தற்போதைய மாணவிகட்கு மட்டுமின்றி, பழைய மாணவிகட்கும், அவர்களின் தாய்மார்கட்கும், அதிகப்படியாக உதவி புரிந்து வருகின்றது. நாளிதழ்களும், கிழமை இதழ்களும் ஆர்வத்துடன் படித்துணரப்படுகின்றன. படிப்புக் கூடத்துக்கு ஒழுங்காக வருபவருக்கு உலகத்துச் செய்திகள் எட்டும்படி இந்த ஏற்பாடு உதவி புரிகின்றது.

இசை

இசை ஓர் உயரிய கலையாதலால், இந்தியாவில், பரம்பரையாக அதனைப் பெண்களின் அணிகலமெனக் கருதி வந்திருக்கின்றனர். எனவே கருவிகள் மூலமாகவும், வாய்ப்பாட்டின் மூலமாகவும் இசைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. தனியாகவும் கூட்டமாகச் சேர்ந்தும் பாடுவது மாணவிகளின் திறமையை அபிவிருத்தி செய்கின்றது. பாடசாலையின் இரண்டாவது வருடத்தில் "ஹார்மோனியம்" ஒன்று வாங்கப்பட்டது. அதுமுதல், இசை வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. பள்ளிக்கூடப் பாடத்திட்டத்தில் இசைப் பயிற்சி ஒரு கட்டாயப் பாடமாகும்.

உடற்பயிற்சி விளையாட்டுகள்

"உடம்பை வளர்த்தேன்; உயிர் வளர்த்தேனே" என்பது திருமூலர் திருமந்திரம் எனவே, இந்தப் பாடசாலையில் மாணவிகளது உள்ளத்துக்கு மட்டுமின்றி உடம்புக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. பெண்களுக்குத் தேகப்பயிற்சி தேவையாதலால் [illegible] னர். உடற்பயிற்சி வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. 1940-ல் விசாலமாக்கப்பெற்ற புதிய விளையாட்டுமைதானங்களில், மாணவிகள் விளையாடி வருகின்றனர். வருடாந்தரப் போட்டி விளையாட்டுகளும் நடத்தப்படுகின்றன.

பரிசுகள்

ஒவ்வொரு வகுப்பிலும் பல்வேறு பாடங்களில் முதன்மையாக நிற்கும் மாணவிகட்குப் பரிசுகள் கொடுக்கப்படுகின்றன. பள்ளிக்கூடத்துக்கு ஒழுங்காக வருதல், நன்னடத்தை, கைவேலை இவற்றிற்காகவும் பரிசுகள் வழங்கப்படுகின்றன. நன்குபடிப்பதற்குப் பரிசு வழங்குதல் ஒரு சிறந்த தூண்டுகோலாக இருக்கிறது. மேலும், பிள்ளைகள் ஒருவருக்கொருவர் போட்டி போட்டு முன்னேற வேண்டுமென்ற அவாவை உண்டுபண்ணவும் காரணமாயிருக்கிறது. பரிசு வழங்குதலின் நற்பயனை உணர்ந்த ஸ்தாபகர், இந்த வழக்கத்தை 1922-ல் ஆரம்பித்தார். அது ஒவ்வொரு வருடமும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

பொருட்காட்சி சாலை

பாடசாலை ஆரம்பமானதிலிருந்தே பொருட்காட்சி சாலை ஆரம்பிக்கப்பெற்று விட்டது. புத்தகங்களில் படிக்கும் பலவிதப் பொருள்கள் பற்றிய பாடங்களின் சரியான வடிவங்களை மாணவிகட்குத் தெளிவாய்க் காட்டுவதற்காகப் பஞ்சடைத்த மிருகங்கள், களிமண்ணாற் செய்த மாதிரி உருவங்களாதியன பொருட்காட்சியில் சேர்க்கப்பெற்றன. பின்னர், உடற்கூறு சம்பந்தமான சித்திரங்களும் சேர்க்கப்பெற்றன. மாணவிகள் அடிக்கடி இவற்றைக் கண்டு களிக்கின்றனர். பாடசாலையைப் பார்க்க வருபவர்களும் இவற்றைப் பார்க்கத் தவறுவதில்லை.



திரு. மெ. செ. மெ. மெ. மெய்யப்ப செட்டியார், நன்கொடையாளரும், கரஸ்பாண்டெண்டும்

பெண்கள் கழகம்

பொது மேடைகளில் பிரசங்கம்புரியும்வன்மை பெற இங்கு மாணவிகட்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. மாணவிகளே தலைமை வகித்தார்கள் என்றும், சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள் என்றும் இந்தக் கழக நிகழ்ச்சிக் குறிப்பு தெரிவிக்கிறது. ஆசிரியைகள் பார்வையாளர்களாகவே இருந்துவருகின்றனர். 1919-ல் ஆரம்பித்த சாரதா விலாஸ் பெண்கள் சங்கத்தில், வெள்ளிக்கிழமைதோறும் தலைமை ஆசிரியரோ அல்லது உதவி ஆசிரியர்களில் ஒருவரோ, மாணவிகளின் கூட்டங்களில் நீதிநெறி, நல்லொழுக்கம், மதம் முதலிய விஷயங்கள் சம்பந்தமாகப் பேசுவது வழக்கமாக இருந்தது; அந்தச் சாரதா விலாஸ் சங்கந்தான் இப்பொழுது பெண்கள் கழகமாக ஆகியிருக்கிறது.

நாடக சபை

மாணவியரது நாடக சபை சமீபத்திலேயே ஆரம்பிக்கப்பட்ட தெனினும், நல்ல வேலை செய்திருக்கிறது. பிள்ளைகளின் நடிப்புத் திறமை விருத்தியடைந்திருக்கிறது. மாணவிகட்கு இது பொழுதுபோக்கான வேடிக்கை விருந்தளிக்கின்றது.

பெண்கள் சாரணர்

பெண் சாரணர்களும், "புல் புல்" களும், பாடசாலை அலுவல்களில் முக்கிய அம்சங்களாக விளங்குகின்றனர். 1940-ல் இச் சாரணப்படை அமைக்கப்பெற்றது.

திரு. ராஜா ஷண்முக ராஜேஸ்வர சேதுபதி, ராமநாதபுரம் ராஜா, வெள்ளி விழாக் கொண்டாட்டத் தலைவர்

இதற்குகாரைக்குடி நகரமன்றத் தலைவராயிருந்த திரு. T. புருஷோத்தம் அவர்களே காரணமாவார். இதன் மூலம் சிறுமிகளிடையே தொண்டு செய்யும் உணர்ச்சி ஊட்டப்பெறுகிறது; அவர்களும், பெண் சாரணிய இயக்கத்தின் லட்சியங்களை உணர அக்கரையோடு முயன்று வருகின்றனர்.

சட்டாம் பிள்ளைகள்

'தொண்டும் தியாகமு'ந் தான் இக்கலாசாலையின் லட்சியங்கள். 5-வது வகுப்பு முதற்கொண்டு ஒவ்வொரு வகுப்புக்கும் ஒரு சட்டாம்பிள்ளை உண்டு. வகுப்பு நடக்கும் நேரங்களிலும், மற்ற ஓய்வு நேரங்களிலும், பிள்ளைகள் ஒழுங்காக நடந்து கொள்ளும்படி பார்த்துக்கொள்ள வேண்டியது இவர்களதுவேலை. குடிதண்ணீர், சுகாதாரம் ஆகியவற்றையும் இவர்கள் கவனித்துக்கொள்ளுகின்றனர்.



கூடை முடைதல்.



பாடசாலை - 1943.

சிறந்த முறையில் நிர்வகிக்கப்படும் பெண் பாடசாலை

பார்வையாளர் புத்தகத்திலிருந்து சில குறிப்புகள்

"உபயோககரமான இந்தப் பாடசாலையைச் சிறந்த முறையில் நடத்திவரும் திரு. சொக்கலிங்கம் செட்டியாரைப் பாராட்டுகின்றோம். அழகிய கட்டிடங்கள்; சோர்வடையாத நிர்வாகம்; கவனிப்பு மிகுந்த போனமுறை அன்பு கலந்த மேற்பார்வை. இந்த மாகாணத்திலிருக்கும் வேறு சில பெண் பாடசாலைகளுக்கு இது எடுத்துக் காட்டாய் விளங்குகின்றது. வருங்காலத்தில் தாய்மார்களாக ஆகவேண்டியவர்களைப் பயிற்றுவிப்பதில் உண்மையான முயற்சி எடுத்துக் கொள்ளும் ஆசிரியர்களையும் நாங்கள் பாராட்டுகின்றோம். முற்காலத்தில் நமது பெண்மணிகளுக்குச் சிறப்புத் தந்த தேசியக் குறிக்கோள்களை இச் சிறந்த பாடசாலையின் ஸ்தாபகரும் நடத்துவோரும் மறந்து விடமாட்டார்கள் என்று நம்புகின்றோம். பாடசாலை மண்டபத்தில் நமது வீரப் பெண்மணிகளின் படங்கள் இன்னும் அதிகப்படியாக முக்கியமான இடம்பெற வேண்டுமென்றும், மாணவிகட்குக் கற்றுக் கொடுக்கப்படும் நுண் கலைகளில் ராட்டினமும் இடம்பெற வேண்டுமென்றும் நாங்கள் விரும்புகின்றோம். இப்பாடசாலை நீடூழி வாழ்ந்து பயன்தரல்வேண்டுமென இறைவனை வழுத்துகின்றோம்.

டாக்டர் T. S. S. ராஜன்.

23-8-1920 திரு. வி. கல்யாணசுந்தரம்,

"அஸ்திவாரக்கல் நாட்டபெற்ற பிறகு, இவ்வளவு செழிப்புற்று விளங்கும் இப்பாடசாலையை ஏதன் முதலாக இன்று பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது பற்றிமிகுந்த சந்தோஷப்படுகின்றேன்."

(ஸர்.) A. டாட்டன்ஹாம், அரசியல் நிர்வாகி, புதுக்கோட்டை

19-2-1922

* * *

"இந்தப் பெண் பாடசாலையினைச் சில நிமிஷங்கள் சுற்றிப்பார்த்துச் சந்தோஷப்பட்டேன். இது நல்ல செழிப்பான நிலையில் இருப்பதாகவே தோன்றியது."

4-8-1922 மேரி வெல்லிங்டன்

* * *

"திரு சொக்கலிங்கச் செட்டியாரது பாடசாலையை மகிழ்ச்சியுடன் பார்வையிட்டேன். மாணவிகளது டிரில்லையும், நடிப்புப் பாட்டுகளையும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யப் பொருட் காட்சிசாலைக்கு அனுப்பிய சில பொருள்களையுங் கண்டு களிப்புற்றேன். வெகு காலமாக இருந்து வந்த ஒரு குறையைத் திரு. சொக்கலிங்கஞ் செட்டியார் நிவர்த்தி செய்து விட்டார் என்றே நான் கருதுகிறேன். பாடசாலை சகலவித நலன்களையும் பெறுவதாக."

D. N. ஸ்ட்ராத்தி, சென்னை அரசாங்க ஆலோசகர்

20-10-1923

* * *

"பாடசாலையினை மறுமுறை பார்க்கும் பாக்கியம் பெற்றேன். நான் பார்த்த பெண் பாடசாலைகளிலெல்லாம் மிக நல்ல முறையில் நடத்தப்படும் பாடசாலைகளில் இதுவும் ஒன்றாகும். இது தக்க விதத்தில் நடந்து வருவதால் ஏற்படும் பெருமை இதன் நிர்வாகியையும் தலைமை ஆசிரியரையுமே சாரும்.

S. V. இராமமூர்த்தி, சென்னை அரசாங்க ஆலோசகர்

22-11-1924

* * *

"இன்று இப்பாடசாலையைக் கண்டு இன்புற்றேன். இது திறமையாக நடத்தப்பட்டு, நிர்வாகத்தினர்க்குக் கௌரவத்தைக் கொடுக்கின்றது. இதனை நடத்தும் திரு. மெய்யப்ப செட்டியாரது கொடைத் திறமை மிகவும் மெச்சத் தகுந்தது."

ஸர். முஹம்மது உஸ்மான் சாஹிப் இராஜப்பிரதிநிதி நிர்வாக சபை அங்கத்தினர்

11-11-1936

காரைக்குடி ஸ்ரீ மீனுக்ஷி உயர்தர பெண்பாடசாலை

25-வது ஆண்டு விழா

(நமது நிருபர்)

காரைக்குடி ஸ்ரீ மீனாட்சி பெண்கள் ஹைஸ்கூலின் 25-வது ஆண்டு நிறைவு விழா சென்ற திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு ராமநாதபுரம் ராஜா ஸ்ரீ. ஷண்முக ராஜேஸ்வர சேதுபதி அவர்கள் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. ஆண்களும் பெண்களுமாக ஏராளமான பேர் வந்திருந்தனர். சமீப ஊர்களிலிருந்தும் பெங்களூர், சென்னை முதலிய தூர இடங்களிலிருந்தும் பிரபலஸ்தர்கள் பலர் வந்திருந்தனர். கொட்டகையினுள்ளேயும் வெளியேயும் ஒலி பெருக்கிகள் வைக்கப்பட்டிருந்தன.

தலைவருக்கு ஸ்கூல் நன்கொடையாளர் பெரிய மாலையணிவித்து அழகிய பூச்செண்டும் அளித்தார். மாணவிகள் சிலர் கடவுள் வணக்கம் பாடினர். சேது மன்னரை வாழ்த்திப் பெண்கள் பாடினர். விழாவைப் பாராட்டி, புதுக்கோட்டை அட்மினிஸ்ட்ரேட்டர் ஸர் அலக்ஸாண்டர் டாட்டன்ஹாம், ஜெமினி ஸ்ரீ. எஸ். எஸ். வாசன், பிரபாத் டாக்கிஸ் ஸ்ரீ. கண்ணபிரான், தேவகோட்டை குமார ஜமீன்தார், ஸ்ரீ. கானே ராஜா, ஸ்ரீ. எம். கே. தியாகராஜ பாகவதர், ஸ்ரீ. ராமப்பிரமம், மதுரை ராவ்சாகிப் ஸ்ரீ. ராஜம் நாயுடு, குமார ராஜா ஸர் எம். ஏ. முத்தையா செட்டியார், சென்னை ஸ்ரீ. வி. வி. சீனிவாச ஐயங்கார், புதுக்கோட்டை திவான் பி. கலிபுல்லா சாகிபு, ஸ்ரீ. டி. கே. சிதம்பரநாத முதலியார், ஸர் பி. டி. ராஜன், டாக்டர். பி. சுப்பராயன், டாக்டர் அருண்டேல், ஸர். எம். வி. டி. எம். சிதம்பரம் செட்டியார் முதலிய பலர் அனுப்பியிருந்த வாழ்த்துச் செய்திகள் படிக்கப்பட்டன.

பிறகு ஸ்ரீ. மெ. செ. மெ. மெ. மெய்யப்ப செட்டியார் அவர்கள், தலைவர் அவர்களுக்கு ஒரு வாழ்த்துப் பத்திரம் படித்துக் கொடுத்தார்கள். அழகிய வெள்ளிப் பிளேட்டில் பத்திரம் பொறிக்கப்பெற்று தங்க வேலைப்பாடுகளுடன் திகழ்ந்தது. ஸ்கூல் தலைமை ஆசிரியை ஸ்ரீமதி சுபத்ரா தேவி பி.ஏ., எல். டி., வெள்ளி விழா அறிக்கையைப் படித்தார். அதில் சென்ற 25 வருட காலத்தில், ஒரு கீழ்த்தர ஆரம்பப் பாடசாலையிலிருந்து ஒரு உயர்தரக் கலாசாலையாக அபிவிருத்தி யுற்றிருப்பதன் சுருக்கமான சரித்திரம் விளக்கப்பட்டது. தற்போது 270 மாணவிகள் பயில்கின்றனர், 16 ஆசிரியைகள் இருக்கின்றனர். ஹைஸ்கூல் பாடத் திட்டப்படியுள்ள பாடங்களுடன், சங்கீதம் சமையல், படம் வரைதல், நடனம், தையல், பின்னல் பூவேலை, கூடை முடைதல் முதலியனவும் கற்பிக்கப்படுகின்றன பள்ளிக்கூட லைப்ரரியில் தற்போது 1887 புத்தகங்கள் இருக்கின்றன. முதல் வருஷத்தில் இந்தப் பள்ளிக்கூடத்துக்கு ஏற்பட்ட நிர்வாகச் செலவு 2000-8-0; சென்ற வருஷம் ஏற்பட்ட செலவு ரூ. 10,854. மாணவிகளிடமிருந்து சம்பளம் வசூலிக்கப்படாமல் இலவசமாகவே கல்வி அளிக்கப்படுகிறது. எல்லாப் பிள்ளைகளுக்கும் புத்தகம், சிலேட், கை வேலைகளுக்கான சாதனங்கள் முதலியனவெல்லாம் இலவசமாகவே வழங்கப்படுகின்றன.

சேது மன்னர் உரை

விழாத் தலைவர் ராமநாதபுரம் ராஜா அவர்கள் நிகழ்த்திய தலைமை உரை வருமாறு:-

ஸ்ரீ. மெய்யப்ப செட்டியார் அவர்களே, சீமான்களே, சீமாட்டிகளே, மாணவிகளே, இன்று உங்கள் வெள்ளி விழாவில் கலந்துகொள்ளும்படியானகௌரவத்தை எனக்கு அளித்ததற்கு முதலில் வந்தனம் செலுத்திக்கொள்கிறேன். வெள்ளி விழா நடத்த உத்தேசித்த உடனேயே ஸ்ரீ. மெய்யப்ப செட்டியார் அவர்கள் என்னைத் தலைமை வகிக்கும்படி கேட்டார்கள். நானும் இணங்கினேன். எனது உடம்பு அசௌக்கியம் காரணமாக முன்னரே நடைபெறவேண்டிய இந்த விழாவை இதுவரை ஒத்திவைக்கும்படியாக நேர்ந்துவிட்டது. அவர்கள் தமது வரவேற்பு பத்திரத்தில் சொல்லியபடி அவர்கள் பிதா ஆரம்பித்த இந்தக் கலாசாலையை எனது பிதா திறந்துவைத்தார்கள். எனவே தலைமை வகிக்கும்படி இப்பொழுது என்னைக் கேட்டபோது நான் மறுக்க முடியாச் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்ள வேண்டியவனுகி விட்டேன். அவர்கள் பிதா இந்தக் கலாசாலையை ஏற்படுத்தியது மிகவும் பெருமைப்படத்தக்க விஷயம். பெண் கல்வி அனுவசியம் என்றும், பெண்களுக்குச் சமையல் தொழில்தான் தெரிந்திருக்க வேண்டுமென்றும், படித்தால் பழக்கவழக்கங்கள் கெட்டுப் போய்விடுமென்றும் அபிப்பிராயங்கள் பரவியிருந்த காலமுமுண்டு. இது முற்றும் தவறான அபிப்பிராயம். மற்ற தேசங்களில் நடக்கும் காரியங்களைப் பார்த்தால் நமது நாட்டுப் பெண்கட்குக் கல்வி எவ்வளவு அவசியமென்பது நன்கு தெரியவரும். இன்று நடக்கும் யுத்தத்தில், பெண்களின் முன்னேற்றம் காரணமாகத்தான் அவர்களது புருஷர்கள் வீரத்துடன் உயிரைத் திரணமாக மதித்துப் போராடி வருகிறார்கள். அவர்களது தாய்மார்கள் வீர உணர்ச்சியுடன் தங்கள் பிள்ளைகளை வளர்த்து வந்ததே இதன் காரணம். இந்து மதத்திலே கல்விக்குத் தெய்வமாக சரஸ்வதியைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். கலையின் உச்ச நிலையை ஒரு பெண்ணுக்குக் கொடுத்திருப்பதிலிருந்தே பெண்கள் கல்வி பயில்வது முக்கியம் என்று விளங்குகிறது. முன் காலத்தில் பல பெண்கள் பயின்று நாட்டுக்குச் சேவை புரிந்திருப்பதாக நமது

(அடுத்த பக்கம் பார்க்க)

(முன் பக்கத் தொடர்ச்சி)

சரித்திரம் கூறுகிறது. கல்வி பயில்வதில் ஆணுக்கும் பெண்ணுக்கும் வித்தியாசமே வேண்டியதில்லை. "கண்ணுடையரென்பவர் கற்ருேர், முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்" என்று வள்ளுவர், பொதுவாகச் சொன்னுரே யன்றி ஆண்கட்குமட்டும் கல்வி வேண்டும் என்று வேற்றுமைப்படுத்திச் சொல்லவில்லை. பெண் கல்வி மிக முக்கியமான விஷயம். அதன் பலனை நிதர்சனமாகப் பார்க்கிருேம். எந்த நாடும் முன்னேற வேண்டுமென்ருல், அந் நாட்டுப் பெண்கள் நாகரிகமடைந்தால் தான் அது முடியும் என்பது அறிஞர் துணிபு. 25 வருடங்கட்கு முன் தீர்க்க தரிசனத்துடன் இவ் விஷயத்தை உணர்ந்து ஸ்ரீமான் சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் இக்கலாசாலையை ஆரம்பித்ததற்கு எல்லோரும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிருேம். தம் பிதா சென்ற வழியைப் பின்பற்றிப் புத்திரரும் சிரத்தையுடன் இதை அபிவிருத்தியுறச் செய்து வருவதால் இன்று இந்த வெள்ளி விழாவைக் கொண்டாடுகிருேம். "தந்தை மகற்காற்று நன்றி, அவயத்து முந்தியிருப்பச் செயல்" - "மகன் தந்தைக்காற்று முதவி இவன் தந்தை என்னேற்ருன் கொல்லெனுஞ் சொல்" - இந்த இரு குறள்களையும் சம்பூரணமாக்கி விட்டார். ஸ்ரீமான் மெய்யப்ப செட்டியார் இன்று (கரகோஷம்). ஒருவித உதவியும் கோராது அவர்கள் தியாகபுத்தியுடன் தேச முன்னேற்றங் கருதி, பெண் கல்வியை வளர்த்து வருகிருர்கள். நாம் விரும்புவதெல்லாம் அவர்கள் தங்க விழாவும் நடத்தி, வைர விழாவும் நடத்தி, அதற்குப் பின் நூற்ருண்டு விழாவும் அவர்களே யிருந்து நடத்தும்படியாய் எல்லாம்வல்ல இறைவன் அருள்புரிய வேண்டு மென்பதுதான்.

பின்பு மாணவிகள் ஸ்ரீமான் மெய்யப்ப செட்டியாரை வாழ்த்தி ஒரு பாட்டுப் பாடினர். காரைக்குடி நகரத்தார் சார்பாக ஸ்ரீமான் பனை. மெ. மெ. பழ. பழனியப்ப செட்டியார், ஸ்ரீமான் மெய்யப்ப செட்டியார் அவர்கட்கு ஒரு உவகை உரை படித்துக் கொடுத்தார். வெள்ளிப் பிளேட்டில் அழகிய தங்க வேலைப்பாடுகளுடன் உரை பொறிக்கப் பெற்றிருந்தது, ஸ்ரீமான் கி. நாராயணன் செட்டியார் அவர்கள் ஸ்ரீமான் மெய்யப்ப செட்டியார் அவர்களுக்கு மாலை யணிவித்து ஒரு அழகிய பூச்செண்டும் அளித்தார். வாலாஜாபாத் இந்துமத பாடசாலையாரின் சார்பாக ஸ்ரீமான் வா. தி. மாசிலாமணி முதலியார் அவர்களும், ஸ்ரீமான் மெய்யப்ப செட்டியார் அவர்கட்கு ஒரு பாராட்டுரை வாசித்தளித்தனர்.

ஸ்ரீ. மெய்யப்ப செட்டியார் உரை

தமக்களிக்கப்பட்ட பாராட்டுப் பத்திரங்களுக்குப் பதிலுரையாக ஸ்ரீமான் மெ. செ. மெ. மெ. மெய்யப்ப செட்டியார் அவர்கள் பேசியது வருமாறு:-

இந்த மீனுட்சி பெண்பாடசாலை நடத்தி வருவதைப் பாராட்டி, இதன் வெள்ளி விழா வைபவம் நடக்கும் இன்றைய தினத்தில் ஒரு பாராட்டுரையை நகரத்தாரவர்களும், வாலாஜாபாத் இந்துமத பாடசாலையாரும் அன்புடன் அளித்திருப்பதை பெருமையுடன் ஏற்றுக் கொள்கிறேன். தருமம் செய்வதிலேயே பெருநோக்கம் கொண்ட நமது நகரத்தாரவர்கள், எவ்வளவோ தானதருமங்களை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் ஏராளமாகச் செய்து வருகிருர்கள். மற்றவர்களைக் காட்டிலும் தருமம் செய்வதில் நகரத்தார் மிகுந்த முற்போக்குடையவர்களென்பதை உலகமே பாராட்டி வருகிறது. அப்படிப்பட்ட பெருமையையுடைய நகரத்தார்கள் வசிக்கும் முக்கியமான ஊராகிய இவ்வூரில் இந்தக் கல்விச் சாலை ஏற்பட்டிருப்பதும் இதனை நகரத்தார் அன்புடன் பாராட்டுவதும் மிகுந்த மகிழ்ச்சிக்குரிய விஷயங்களாகும். என் தந்தையாரவர்கள் பெண் கல்வி வளர்ச்சியில் ஆர்வங் கொண்டு தொடங்கிய இக் கல்விச் சாலையை நடத்தி வருகிறேன். கல்விச் சாலையும் நாளுக்கு நாள் வளர்ந்தோங்கி வருகிறது. நான் பொருளுதவி செய்தாளும் திறம்பட நடத்தத் தயாராக இருந்தாளும் பெற்றோர் பின்னுக்கு இன்னும் அனுப்பினுல்தான் குறிப்பிட்ட பயனை அடைய முடியும். கௌரவம் பொருந்திய நகரத்தாரவர்களும் பெற்றோருக்கு தங்கள் பின்னைகளை அனுப்பி இன்னும் ஆதரவு தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கல்விச் சாலையின் ஆசிரியைகள் காட்டும் ஊக்கமும் உழைப்பும் பேர்தும் உறுதுணையாக இருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

பின்னர் மாணவிகளது நடனம், அபிநயம், ஆடல் பாடல் முதலியன இன்னிசையுடன் நடைபெற்றன. தசாவதாரத்தை விளக்கும் அபிநய ஆடல்-பாடலும், கோபிகா-கிருஷ்ண நடனமும் நன்ருக இருந்தன.

திரு சொ. முருகப்பா பிரசங்கம்

பின்னர் 'குமரன்' ஆசிரியர் திரு. சொ. முருகப்பா அவர்கள் மெ. செ. மெ. மெ. மெய்யப்ப செட்டியாரை மிக்க பாராட்டி பேசினர்.

ஸ்ரீமான் மெய்யப்ப செட்டியாரவர்களுக்கு நகரத்தார்கள் உபசாரப் பத்திரம் படித்துக் கொடுத்தார்கள்.

வகுப்புகளிலும், போட்டி விஜயாட்டுகளிலும் முதன்மையாக நின்ற மாணவிகட்குத் தலைவரால் பல விலையுயர்ந்த பொருள்கள் பரிசாக வழங்கப்பெற்றன.

ஸ்ரீமான் மெ. செ. அ. மெ. பழனியப்ப செட்டியார் அவர்கள், இந்த வெள்ளி விழா வைபவத்திற்குத் தலைமை தாங்கி நடத்தித் தந்த சேது மன்னர் அவர்களுக்கும், சொற்பொழிவு ஆற்றிய 'குமரன்' ஆசிரியர் சொ. முருகப்பா அவர்களுக்கும், கல்விச் சாலையையும் பரிபாலகரையும் பாராட்டி வாழ்த்திய நகரத்தார் அவர்களுக்கும், இவ் வைபவத்துக்குச் சமூகமளித்து கௌரவித்த யாவருக்கும் தங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம் என்று நன்றி கூறினர்.

விழா நிகழ்ச்சிகளின் பகுதிகள் பல போட்டோவிலும், பிலிமிலும் பிடிக்கப் பெற்றன. செந்தமிழ் வாழ்த்துடன் 7-மணிக்கு வைபவம் இனிது முற்றுப் பெற்றது.

16 - 11 - 43 மாலை 4-30 மணிக்கு ஸ்ரீ மீனுட்சி பெண்கள் உயர்தரக் கலாசாலையில் ஒரு சிற்றுண்டி விருந்து நடைபெற்றது. டைரக்டர் சுப்பிரமணியம், டி. புருஷோத்தமம், மானேஜருடைய ஏனைய நண்பர்களும் ஆசிரியைகளும் விருந்திற்கு வந்திருந்தனர். பள்ளிக்கூடத்தின் நிர்வாக முறையைப் பாராட்டி டைரக்டர் சுப்பிரமணியமும், டி. புருஷோத்தமும் சிறிது நேரம் பேசினர். ஆசிரியைகளின் உழைப்பைப் பாராட்டி சில பரிசுகள் வழங்கப்பெற்றன. தமிழ் ஆசிரியை புண்யவதியம்மாள் பள்ளிக்கூட பரிபாலகருக்கும் ஏனையோருக்கும் நன்றி கூறினர்.

மணியோசை

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

டன் உருவாக்கப்பட்டிருக்கலாமென்றும் நினைக்கிறேன்'' என்று இந்திய சட்டசபையில் பகிரங்கமாகச் சொல்லி, சர்க்காரின் அசிரத்தையை ஆணித்தரமாகக் கண்டித்தீர்கள்! சர்க்கார் அதை மறுக்கவில்லை; பொதுப்படையாக ஏனோ தானோ என்று பதில் சொல்லிவிட்டார்கள்! போகட்டும்; சர்க்கார் வேண்டுமென்று பழிவாங்கும் நோக்கத்துடன் செய்திருந்தால், எல்லா நீதிபதியிலும் உயர்ந்த நீதிபதி ஒருவர் இருக்கிருர்; அவரே கேட்டுக்கொள்ளட்டும். சர்க்கார் திட்டப்படி பல ஆயிரக்கணக்கான மக்களைப் பட்டினி போட்டுக்கொன்றுர்களென்ருல் அதற்கும் கடவுள் இருக்கிருர். அவர் மகா நீதியுடையவர்; அவரிடமிருந்து யாரும் தப்பித்துக்கொள்ள முடியாது! இந்த சர்க்காரும் அவருக்குப் பதில் சொல்லித்தாளுகவேண்டும்;

டிங்-டாங்

சௌத்ரீ இஸ்மாய்ல்கான்,

புது-டில்லி.

முஸ்லிம் தலைவரே,

இன்று இந்தியாவில் ஏற்பட்டிருக்கும் சகல கஷ்டங்களுக்கும், சங்கடங்களுக்கும் பிரிட்டிஷார்தான் காரணம். இந்த நிலைமையில் இந்திய சர்க்கார் மாகாண சர்க்கார்மீது பழி போடுவது சுத்த அபத்தம். மாகாண மந்திரிகளே தவறு செய்திருந்தால், கவர்னர் குறுக்கிட்டுத் தடுத்திருக்கலாமல்லவா? வங்க கவர்னர் அவ்வாறு செய்யவில்லை; அது முதல் தவறு; சில மாதங்களுக்கு முன் ஒரு தனி நபர் (காந்திஜி) உயிருக்கு ஆபத்து வந்தது; அதன் காரணமாக 3 சர்க்கார் மெம்பர்கள் ராஜிநாமா செய்தார்கள். இன்ருே லக்ஷக் கணக்கான மக்கள் பசி பட்டினியால் மடிகின்றனர். என்ருலும் ஒரு சர்க்கார் மெம்பர்கூட ராஜிநாமா செய்யவில்லை! செக்கு உலக்கை மாதிரி பதவிகளில் ஒட்டிக்கொண்டிருக்கிருர்கள் என்று சொன்னீர்கள்! உண்மைதான்; இன்று சர்க்கார் ஏஜண்டுகளாக இருக்கும் சர்க்கார் மெம்பர்களுக்கு என்ன வந்தது? யார் இருந்தால் என்ன; யார் இறந்தால் என்ன? அவர்களுக்கு 7 ஆயிரம், 8 ஆயிரம் கணக்கில் மாதந்தோறும் பணம் வந்தால் போதாதா? அவர்கள் தொந்தி வாடாமல் உண்டு, உடுத்தி இருந்தால் போதும்! அது தான் அவர்கள் லட்சியம். தேசத்தைப் பற்றியோ, தேச மக்களைப் பற்றியோ அவர்களுக்கு கடுகளவும் எண்ணம் கிடையாது! ஈர நெஞ்சு இல்லை; இரக்கமுமில்லை. இவர்கள் அலாதி பிறவிகள்! ஒரு தனி ரகம்! ஆகவே, அவர்களைப்பற்றி என்ன சொன்னுலும் அவர்களுக்கு அக்கரை கிடையாது; அது மண்டையிலும் ஏருது! என்னைப் படைத்த பாவி, பனைமரத்திலே பாதி என்று, அவர்களை ஆண்டவன் தெரியாமல் படைத்துவிட்டான். அந்தக் குற்றம் ஆண்டவனைச் சார்ந்ததேயொழிய, அவர்களைச் சார்ந்ததல்ல!

டிங்-டாங்

ஆனந்த விகடன் போட்டிப்
பந்தயங்களுக்கு நிகரற்ற
விடை விமர்சனம் தரும்
பத்திரிகை இது ஒன்றே

காம்ரேட்

இரண்டு போட்டிகளுக்கு சேர்ந்தாற்போல் ஒரே இதழில் வெளிவரும். ஆறு மாத சந்தா ரு. 3-6. தனிப்பிரதி 0-2-9. ரூபாய் 10 டிபாசிட்டு கட்டக்கூடிய ஏஜெண்டுகள் எங்கும் தேவை.

விவரங்களுக்கு :-

மானேஜர் "காம்ரேட்"

வேப்பேரி, சென்னை!

மிகப் பத்திரமுள்ள சேமிப்புத்திட்டம்

யுத்தம் நின்று, சமாதானம் நிலவும்போது சேமித்த பணமெல்லாம் மாயமாக மறையுமென்ருல், வருங்காலத்திற்காக சேமிப்பதின் பயன் என்ன? தங்கம், வெள்ளி, நகைகள், வீடு வாசல்கள், விற்பனைச் சரக்குகள் வாங்குவதில் உங்கள்சேமிப்பை முதலிட்டால், உங்கள்பணத்திற்கும் இக்கதிதான் நேரும். இப்பொழுதிருந்தே இந்தப்பொருள்களின் அநியாய விலைகள் சாதாரண அளவுக்கு இறங்குமென்று எதிர்பார்க்கலாம். உங்கள் சேமிப்பு அப்பொழுது என்ன ஆகும்?

யுத்த காலத்தில் விஷயம் தெரியாதவர்கள் விலையேற்றத்தைக் கவனியாமல் தங்கம், வெள்ளி, வீடு வாசல்களை கண்ணை மூடிக்கொண்டு வாங்குவதால் ஏராளமான பணத்தை இழக்கிருர்கள் என்பதை எல்லோரும் அறிய வேண்டியது அவசியம். நீங்கள் இம்மாதிரியான நஷ்டத்திற்கு ஈடாகாதீர்கள். மிச்சப்படுத்தும் பணத்தைக்கொண்டு நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளை வாங்குங்கள். இந்த சர்ட்டிபிகேட்டுகள் ஒவ்வொன்றும் ரூபாய் 10 தான். 12 வருஷங்களுக்குப் பிறகு அதன் உத்திரவாதமுள்ள மதிப்பு ரூபாய் 15.

முதல் மூன்று வருஷங்களுக்குப் பிறகு எப்பொழுது வேண்டுமானுலும் நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளை பணமாக மாற்றிக்கொள்ளலாம். இந்த சர்ட்டிபிகேட்டுகளில் முதலிட்ட தொகைகளுக்கு வருமான வரி கிடையாது. ஒவ்வொருவரும் ரூ. 5,000 வரைக்கும் இந்த சர்ட்டிபிகேட்டுகளை வாங்கலாம்.

நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளை

வாங்கிச் சேமித்த பணம்

என்றும் பத்திரமானது

பதிவுசெய்தல் - ஒரு நல்ல முன்னேற்பாடு

அஸாம், வங்காளம், பீஹார், ஒரிஸா, சென்னை மாகாண வாசிகளின் சௌகரியத்துக்காக, லக்ஷ்மணபுரியில் ஐக்கியமாகாண போஸ்ட் மாஸ்டர் ஜெனரலின் மேற்பார்வையில் ஒரு மத்தியப் பதிவு ஆபீஸ் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இங்கு டிபென்ஸ் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகள், தபாலாபீஸ் காஷ் சர்ட்டிபிகேட்டுகள், நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளை வைத்திருப்பவர்கள் தங்கள் சர்ட்டிபிகேட்டுகளின் விபரங்களை இலவசமாகப் பதிவு செய்து கொள்ளலாம். இதன் மூலம், சர்ட்டிபிகேட்டுகள் காணுமற் போனுலுஞ் சரி, அழிந்துவிட்டாலுஞ் சரி, தங்கள் உரிமையை நிரூபிப்பது சுலபம். பூரா விபரங்களையும் உங்களூர் தபாலாபீஸில் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

ஸேவிங்ஸ் பாங்கி உள்ள எந்தத் தபாலாபீசிலும் நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளை வாங்கலாம்.

CPU 41 5

டம்-டம் குண்டு

கவர்னர் கைவரிசை! – என்றைக்கும் ஆண்டி ! குலாம் காதரும், கோகுலாஷ்டமியும் ! பணத்துக்கும் போதையா? – சிண்டு முடிவானேன் ? ‘ஸ்ட்ராங்-டோஸ்’’!-வானர அவதாரம் ! வயிறு பற்றி எரியுதே!

குயவனுக்குப் பல நாள் வேலே, தடியடிக்காரனுக்கு ஒரே நாள் வேலே! சென்னைக் கவர்னர்கூட அந்தத் தடியடிக் காரன் கைவரிசையைத்தான் இன்று காட்டிவருகிருர்! குடி கொடியது; குடி குடி கெடுக்கும்; இன்னமும் குடியைப் பற்றி எவ்வளவோ சொல்லியிருக்கிருர் கள். அதை வெறுக்காத மக்கள் கிடை யாது; அதை வெறுத்துத் தள்ளாத வேதமும் கிடையாது, என்ருலும், குடிப் பழக்கம் எப்படியோ எல்லா நாடுகளி லும் புகுந்துவிட்டது! குடி விஷத்துக் குச் சமம்; அந்த விஷத்தை உண்ணப் பழகிவிட்டால், வேறு விஷம் சாப்பிட வேண்டியதே இல்லே! விஷம் உடனே கொல்லலாம்; ஆனுல். குடியோ, உடலே உருக்கி, உயிரைப் படிப்படியாக வதைத்துகொல்லும். அத்தகையகுடியை ஒழிக்க இந்தியத் தலேவர்கள் பலர் எத் தனையோ ஆண்டுகளாக முயற்சித்து வந்தனர்; இதில் அதிக முயற்சி எடுத் துக்கொண்டவர் காந்திஜி; காந்திஜியின் முயற்சியால் காங்கிரஸ் இதில் விசேஷ அக்கரை காட்டியது. ஆகவே, காங் கிரஸ் சர்க்கார் ஏற்பட்டதும், காங்கிரஸ் மந்திரிகள் இந்த மதுவிலக்கில் தீவிர முயற்சி எடுத்துக்கொண்டனர். ராஜ கோபாலாச்சாரியாரின் விடாமுயற்சியை சென்னே மக்கள் ஒருபோதும் மறக்க முடியாது. அவருடைய தீவிர முயற்சியே சென்னேயில் மதுவிலக்குச் சட்டம் அமு லுக்குவரக் காரணம். இந்த மதுவிலக்குச் சட்டத்தில் கட்சி பேதமே இல்லே; எல் லோரும் மதுவிலக்குச் சட்டத்தை ஆத ரித்தனர். படாதபாடுபட்டு, ஆச்சாரியார் மதுவிலக்குச் சட்டத்தை சேலம், சித்தூர், கடப்பை, வடஆற்காடு முதலிய நான்கு ஜில்லாக்களில் அவரே அமுலுக்குக் கொண்டுவந்தார். அந் நாளே அந்தந்த ஜில்லாக்களில் பெரிய திருநாளாகக் கொண்டாடினர்கள். ஆனுல், அந்த மதுவிலக்குச் சட்டத்தை, சென்னே கவர் னர் ஒரேநாளில், அடித்துத் தள்ளிவிட் டார்! மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்துவிட்டதாக சர்க்கார் உத்திரவு போட்டிருக்கின்றனர்.

பணக் கொள்ளே!

* சென்னே கவர்னரின் இந்த சட்டத் தைச் சட்டமில்லா சட்டம் என்று ஆச் சாரியார் சொல்லுகிருர். ஆம்; அது சட்ட மில்லாத சட்டந்தான். ஜனப்பிரதிநிதிக ளான மந்திரிகளும், சட்டசபை அங்கத் தினர்களும் ஏகோபித்து நிறைவேற்றிய சட்டத்தை, ஒரு கவர்னர் ஒரேநாளில் ஒரு பேனு முனேயால் தட்டி எறிந்துவிட முடியாது! அப்படிச் செய்வது அக்கிரம மேயாகும். இந்த மதுவிலக்குச் சட் டத்தை ரத்து செய்வதற்குச் சர்க்கார் கூறும் காரணங்கள்தான் ரொம்ப தமாஷ்! மதுவிலக்குச் சட்டத்தை ரத்துசெய்வதற் குப் பணப் பழக்கமே காரணமாம்! அதி கப் பணப் பழக்கம் இருப்பதால், அதைக் கட்டுப்படுத்த "சர்க்கார் இந்த மதுவிலக் குச் சட்டத்தை ரத்துசெய்யத் துணிந்தார் களாம்! இது மொட்டைத் தலேக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடுவது போலிருக்கிறது! பணப் பெருக்கம் அதிக மாகிவிட்டது என்ற பேச்சு தற்காலம் மும்முரமாக இருக்கிறது. ஆகவே, சர்க் கார் அதிகாரிகள் தொட்டது பட்டதற் கெல்லாம் பணப் பெருக்கம், பணப் பெருக்கமென்று அடித்துக்கொள்ளுகிருர் கள்! பணப் பெருக்க மென்ருல் என்ன; எதற்காகப் பணம் பெருகிவிட்டது; எப்படி பெருகிவிட்டது என்ற விஷயமே தெரியாமல், பணப் பெருக்கம் என்ற போலிக் காரணம் சொல்லித் தப்பித்துக் கொள்ளுகிருர்கள்!

“ஸ்ட்ராங் டோஸ்’’!

* பணமே பெருகியிருக்கட்டும்; அந்தப் பணப் பழக்கம் யாரிடமிருக்கிறது? பணக் காரர்களிடமே பணப் பழக்கம் அதிகமாக இருக்கிறது. பணத்தைப்போட்டு பணத் தை இன்னமும் ஏராளமாகக் கொள்ளை யடிப்பவர்கள் பணக்காரர்களே! பணமில் லாத ஆண்டி,என்றைக்கும் ஆண்டிதான்! தினசரி 12 அணு கூலியென்ருல், மேலதி கமாக ஒரு நாலணு அதிகம் கிடைக்க லாம்; அந்த நாலணுவுக்குச் செலவு உண்டு. விலைவாசிகள் ஒன்றுக்குப் பத் தாக ஏறியிருக்கின்றன; ஆகவே, ஒரு ரூபாயும் போய், மேலும் கடன் வாங்க வேண்டியதுதான். இன்றேல், அரை வயிறு குறைவயிருகப் பட்டினி கிடந்து காலந் தள்ளவேண்டியதே! கள்ளுக்கடைக்குப் போகும் பணம் மீண்டும் வெளியில் வராதா? கள் ளுக்குக்கொடுத்த பணத்துக்கும் போதை ஏறிவிடுமா? இல்லேயே; அப்படியிருக்க சர்க்கார் கள்ளுக்கும், பணப் பெருக்கத் துக்கும் ஏன் சிண்டுமுடியப் பார்க்கிருர் கள்? இதற்கு முட்டாள்த்தனம் காரணமா அல்லது, எல்லோரையும் முட்டாள்க ளென்று நினைத்துக்கொண்டு. இந்தப் போலிவாதஞ் செய்கிருர்களா? தான் முட்டாள் எல்லோரையும் முட்டாள் என்றுதான் நினைப்பான்! இது ரொம்ப சகஜம். சாக்சார் கூறும்மற்ருெருகாரணம்

(அடுத்த பக்கம் பார்க்க)

திருப்தி, அமைதி

ஒரு கப் டீ அருந்தியவுடன். கேட்பானேன், நரஸூஸ் டீ தான்! நல்ல காபி, டீயை அனுபவிக்க அறிந்தவர்கள் நரஸூஸ் காபி, டீயையே விரும்புகிருர்கள்.

நரஸூஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி, சேலம் தென்னிந்தியா

MNK-22-TM

“அவனுக்கு எந்த வேலைக்கும் போதிய சக்தி இருக்கிறது!”



புஷ்டியைத் தரத்தக்கதும், விடமின் கூடினதுமான உணவுதான் குறைந்த சக்தியைத் திரும்பவும் கொடுக்கும். இந்த சமயத்தில்தான் டால்டா மிகவும் உதவியளிக்கிறது. டால்டாவினுல் உணவிற்குச் சேர்க்கப்படும் போஷாக்கும், விடமினும் சக்தியை காப்பாற்றுகிறது. சுகத்திற்காக உங்களுடைய குடும்ப ஆகாரங்களே டால்டாவினுல் சமையல் செய்யுங்கள். அதுதான் சக்திக்கும், சுகத்திற்கும் காரணம்.

விடமின் சேர்ந்த டால்டா சரீரத்தை திடகாத்திரமாக வளரச் செய்யவும், குறைந்த பலத்தை ஈடு செய்யவும் உதவுகிறது . . . விடமினுடன் சேர்ந்த டால்டா ஓர் சிறந்த ஆகார வஸ்து. அது சக்தியைத் தரத்தக்கது. டால்டாவினுல் ஆகாரத்திற்கு அதிக சக்தி கிடைக்கிறது. அநேக உணவுப் பொருள்களில் விடமினும், சக்தியும் குறைவாக இருப்பதால், டால்டாவினுல் உணவுகள் தயாரிப்பது ஓர் சிறந்த முறை. அது பாலர்களுக்கும், விருத்தர்களுக்குங்கூட நல்லது.

விடமின் சேர்ந்த **டால்டா** தாவர எண்ணையால் தயார் செய்யப் பட்டதென்று உத்திரவாதமுள்ளது — சீல் செய்த டின்களில் விற்கப்படுகிறது

HVM. 21-392 TM THE HINDUSTAN VANASPATI MANUFACTURING CO., LTD., BOMBAY

சென்றவிடமெல்லாம் சிறப்பு

4-வது

வெற்றிகரமான வாரம்

திவான் பகதூர்

தமிழ் நாட்டின் 6 பெரிய நகரங்களில் காட்சி

உங்கள் ஊர் தியேட்டரில்

எதிர்பாருங்கள்

: விவரங்களுக்கு :

மாடர்ன் தியேட்டர்ஸ் லிமிடெட்.,

சேலம். : மதுரை.

வாயுவேகத்தில் தயாராகிறது!

மதராஸ் யுனைடெட் ஆர்டிஸ்ட்ஸ் கார்ப்பொரேஷனின்

மான சம்ரக்ஷணம்

(தமிழ்)

நடிக நக்ஷத்திரங்கள்:

எஸ். டி. சுப்புலக்ஷிமி — காளி என். ரத்னம்
வி. என். ஜானகி — டி. ஆர். ராமச்சந்திரன்
ஜி. பட்டு அய்யர் — ராவ்பகதூர் கிருஷ்ணராவ் பான்ஸ்லே
ராஜகோபால அய்யர்

மற்றும் பலர்

டைரக்ஷன்: கே. சுப்பிரமணியம், பி. ஏ., பி. எல்.,

பாட்டு, சங்கீதம்: பாபநாசம் சிவன், ராஜகோபால அய்யர்

ஸ்டுடியோ: நியூ டோன்

: டிஸ்ட்ரிப்யூட்டர்கள் :

தி ஸௌத் இந்தியா பிக்சர்ஸ் லிமிடெட்.,

காரைக்குடி.

பிராஞ்சுகள்: பெங்களூர், பெஜவாடா, கோயமுத்தூர்.

டம்-டம் குண்டு

வேடிக்கையானது. கள்ளில் நல்ல சத்து உணவு இருக்கிறதாம்! ஆகவே, உடல் வருந்தப் பாடுபடுகிறவர்கள் கள் குடிக்க வேண்டுமாம்! புளித்த கள்ளில் உணவு சத்தே கிடையாது. அரையணு தேங்காயில் இருக்கும் உணவுச் சத்துக்கூடக் கள்ளில் இல்லை என்று நிபுணர்கள் சொல்லுகிறார்கள்! அப்படியிருக்க, சென்னை கவர்னர் கள்ளில் உணவுச் சத்து இருக்கிறதென்று எவ்வாறு கண்டு பிடித்தார்? அவருக்கு அதில் அனுபவம் உண்டா? கவர்னர் அறிக்கை கூறுவதுபோல், கள்ளில் நல்ல சத்துள்ள உணவு இருக்குமேயானால், அந்த உணவைக் கவர்னருக்கும், சர்க்கார் அதிகாரிகளுக்கும் ஏன் டாக்டர்கள் சிபார்சு செய்யாமலிருக்கிறார்கள்? இதில் ஒரு சந்தேகம்; கள்ளில் சத்து உணவு அதிகமா, அல்லது. விஸ்கி, பிராந்தி, ஜின் முதலிய சீமைச் சரக்குகளில் சத்து உணவு அதிகமா? நிபுணர்கள் சொந்த அனுபவத்தை வெளியிட்டால் ரொம்ப நலமாக இருக்கும். மதுவிலக்குச் சட்டத்தை எப்படியும் ஒழித்துவிட வேண்டுமென்று வெறிகொண்டிருக்கும் சென்னை சர்க்காருக்கு, நிபுணர்களின் யோசனை நல்ல "ஸ்ட்ராங் டோஸ்" கொடுத்தமாதிரி இருக்கும்! அதற்காகத்தான் நிபுணர்களின் யோசனையை அறிய இவ்வளவு சிரமம் எடுத்துக்கொண்டேன்!

வானர அவதாரம்!

* வெறி பிடித்த குரங்கை தேளும் கொட்டிவிட்டால் கேட்க வேண்டுமா? ஒரு நல்ல காரியத்தைக் கெடுக்க உறுதிகொண்டுவிட்டால். நல்ல மனிதர்கள்கூட வானர அவதாரமெடுத்து அதற்குச் சமமான நிலைமைக்கு வந்துவிடுவார்கள்! இன்னது செய்கிறோம், இன்னது சொல்லுகிறோம், இன்னது யோசிக்கிறோம் என்றுகூட கவனிப்பதில்லை; மூளைக்கும் வெறி ஏறிவிடுகிறது! மூளையும் தீவிரமாக வேலைசெய்வதில்லை. அதிலும், ஒரு உத்தம காரியமான மதுவிலக்குச் சட்டத்தை ரத்துசெய்ய சர்க்கார், துணிவார்களேயாயின், அவர்கள் மூளை எப்படி வேலைசெய்யுமென்று நீங்களே யூகித்துக்கொள்ளலாம். நான்கு ஜில்லாக்களில் சுமார் 70 லக்ஷம் மக்கள் இருக்கிறார்கள். இந்த 70 லக்ஷம் மக்களின் நன்மை தீமைகளை இச்சட்டம் பாதிக்கக்கூடும். இதை சென்னை சர்க்கார் தீர ஆலோசித்திருக்கவேண்டும். ஆனால், சர்க்கார் இந்த 70 லக்ஷம் மக்கள் நலன்களைத் துச்சமாக மதித்துவிட்டனர். அயர்லாந்தின் ஜனத்தொகை30லக்ஷமிருக்கும். அந்த அயர்லாந்தைக்கூட துச்சமாக மதிக்க பிரிட்டிஷ் சர்க்கார் துணியவில்லை. ஆனால், சென்னை சர்க்காரோ அயர்லாந்தைவிட இருமடங்கு ஜனத்தொகையுள்ள நான்கு ஜில்லாக்களை அலட்சியமாக மதித்து, மதுவிலக்குச் சட்டத்தை ரத்துசெய்யத் துணிந்துவிட்டார்! மதுவிலக்கை ரத்து செய்வதற்கு சர்க்கார் சொல்லும் மூன்றாவது காரணம் இன்னமும் வேடிக்கையானது! மதுவிலக்கு அமுலிலிருப்பதால், குற்றங்கள் அதிகரிக்கின்றனவாம்! திருட்டுச் சாராயம் காய்ச்சும் குற்றங்கள் அதிகரித்துக்கொண்டே போகிறதாம்! இந்தக் குற்றங்கள் அதிகரிப்பதில் ஆச்சரியமொன்றுமில்லை. ஒரே கேள்வி. போலீஸ் இலாகா எதற்கு இருக்கிறது? போலீசாருக்கும், போலீஸ் அதிகாரிகளுக்கும் என்ன வேலை? குற்றங்களைக் கண்டுபிடித்துத் தண்டித்தால் குற்றங்கள் அதிகரிக்காமல் தடுத்துவிடலாம்.

வயிறு எரியுதே!

* சர்க்காருக்கு வருமானத்திற்குக் குறைவா? மதுவிலக்குக்காக ஏற்பட்ட விற்பனை வரியை சர்க்கார் இன்னமும் வசூலித்தே வருகிறார்கள். சுமார் 4 கோடி ரூபாய் கிடைக்கிறது; அந்த வரியையும் நான்கு மடங்கு அதிகரித்துவிட்டார்கள். மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்துவிட்டால் சர்க்கார் விற்பனை வரியையும் ரத்து செய்து விடவேண்டும்; அதுதான் முறை; அதுதான் நீதி. ஒன்றில் மதுவிலக்கு அமுலில் இருக்க வேண்டும்; இன்றேல் விற்பனை வரி இருக்கவேண்டும்; இரண்டையும் சர்க்கார் அமுலில் வைத்துக்கொண்டே இருப்பரர்களேயானால் மக்கள் கட்டாயம் கிளர்ச்சி செய்தே தீரவேண்டும். மதுவிலக்குச் சட்டத்தை சிரமப்பட்டு நிறைவேற்றி வைத்த ராஜகோபாலாச்சாரியார், சென்னையில் பேசிய போது ஆக்ரோஷத்துடன் பேசினார். சர்க்கார் மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்யத் துணிந்திருப்பதைக் காண அவரால் சகிக்க முடியவில்லை. வயிறுபற்றி எரிகிறதென்றார்! ஆம்; எரியத்தான் செய்யும். ஆச்சாரியார் வயிறு மட்டுமல்ல, இந்திய மக்கள் 40 கோடி பேர் வயிறும் பற்றியெரியும். விசேஷமாக குறிப்பிட்ட 4 ஜில்லாக்களிலுள்ள 70 லக்ஷம் மக்கள் உள்ளமும் உயிரும் பற்றி எரியுமென்பதில் சந்தேகமில்லை!

மாமி மண்குடம் - மருமகள் பொன்குடம்! அப்பீல் கிடையாது! - காதும் புளிச்சுப் போச்சு! வெறும் துக்கடா! அடாவடி கூடாது! பிள்ளையாருக்கு 100 விடலை! - பட்சி மாறிவிட்டது! "சடன் பிரேக்"! - மும்மூர்த்திகள் வரலாம்! யானை குட்டிபோடும்!

மாமி உடைத்தால் மண் குடம்; மருமகள் உடைத்தால் பொன்குடம்! இது எங்கும் சகஜம்! எல்லோருடைய வீட்டிலும் சகஜமாக நடப்பது! இதற்குக் கேள்வி முறையே இல்லை; அப்பீலும் கிடையாது! இந்த யுத்தத்தில்கூட இது ரொம்ப சகஜமாகிவிட்டது; பல சம்பவங்களைக் கண்கொண்டு பார்க்கக் கொடுத்து வைக்காவிட்டாலும், நிறையக் கேள்விப்பட்டிருக்கலாம்! கேட்டுக் கேட்டுக் காது கூடப் புளித்துப் போயிருக்கும்! சில சமயங்களில் இந்தச் சம்பவங்களைப்பற்றி அழுவதா, சிரிப்பதா என்பதைக்கூட அறியாமல் பலர் திகைத்துப்போயிருப்பார்கள்! இதெல்லாம் வெறும் துக்கடா; தள்ளு குப்பையில் என்று பலர் வெறுப்படைந்திருக்கவும் கூடும்! அவ்வளவுக்கு வெறுக்கத்தக்க முறையில் யுத்தச் செய்திகள் வந்துகொண்டிருந்தன! நேச நாடுகள் கோட்டை விட்டால், அது ராணுவத் தந்திரமாக மாறிவிடும்! போர் முனையிலிருந்து வாபஸ் வாங்கினால்கூட அது வெற்றிகரமான வாபஸாகும்! ஆனால், அச்சு நாடுகள் கோட்டைவிட்டால் அது படுதோல்வி! அச்சுப் படைகள் வாபஸானால் அது ஓட்டம்! ஆமாம்; கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்றுதானே சொல்லவேண்டும்! அதைக் கண்டு யாரும் சிரிக்கக்கூடாது! நேச நாட்டினருக்கு அவ்வளவாவது யுக்தி இருக்கிறதே என்று அவர் யுக்திசாலித்தனத்தை மெச்சிக்கொள்ள வேண்டும்! அப்படிச் செய்யாமல் அடாவடித்தனம் செய்வது கூடாது!

அட ராமா!

* யுத்த ஆரம்பத்தில் அச்சுப் படைகள் நேசப் படைகளை துரத்து துரத்தென்று எவ்வளவு வேகமாகத் துரத்திக் கொண்டு வந்தன; அப்பொழுதெல்லாம் நேச நாடுகளின் சங்கடம் சொல்லி முடியாது! யுத்தச் செய்திகளைப் படிக்கப் பரிதாபகரமாக இருக்கும்! அட ராமா, நேச நாடுகளை இப்படியும் சோதிக்கலாமா என்றுகூடப் பலர் கவலைப்பட்டதுண்டு! நேச நாடுகளுக்கு வெற்றி கிடைக்கக் கூடாதா? வெற்றி கிடைத்தால் பிள்ளையாருக்கு 100 தேங்காய் கூடப் பார்த்தும் பாராமல் விடலை போடலாமே யென்று சிலர் பிரார்த்தனை கூடச் செய்திருக்கலாம்! அவ்வளவுக்கு நேச நாடுகளின் நிலைமை மோசமாக இருந்தது. ஆனால், எப்படியோ பட்சி மாறி விட்டது! நேசநாடுகளின் ஓட்டத்தை இப்பொழுது அச்சு நாடுகள் கடன் வாங்கியிருக்கின்றன! யானைக்கு ஒரு காலம் வந்தால் பூனைக்கு ஒரு காலம் வந்துதானே யாகவேண்டும்!

"சடன் பிரேக்!"

* அச்சுப் படைகள் லிபியாவில் ஆரம்பித்த ஓட்டம் இதாலியில் வந்துதான் நின்றது! ரஷியப் போர்முனையிலும் ஜெர்மன் படைகள் பின்வாங்கி ஓட ஆரம்பித்தன. அந்த ஓட்டத்துக்கு இதுவரையில் முடிவே இல்லாமலிருந்தது ஆனால் திடீரென ரஷியாவிலும், இதாலியிலும், டொடகானிஸ் தீவுகளிலும் ஜெர்மனியர் "சடன் பிரேக்" போட்டனர்! எதிர்பாராதவிதமாகத் திடீரென ஜெர்மன் "பிரேக்" விழுந்ததால், நேச நாடுகள் அசந்துபோயின! நேசப்படைகளும் முன்னேற முடியாமல் திணறுகின்றன! ரஷியப் போர்முனைகளில் ரஷிய ராணுவங்கள் இதற்குமுன் எவ்வளவு வேகமாக முன்னேறிவந்தனவோ, அவ்வளவு வேகமாக முன்னேற முடியவில்லை. மெதுவாகத்தான் நகர்ந்து செல்லவேண்டியிருக்கிறது. கீவ் நகரைக் கைப்பற்றிய ரஷியர், போலந்து எல்லைக்குச் சுமார் 60 மைல் தூரத்தில் வந்துவிட்டனர். ஜெர்மன் ஜெனரல் வான் மான்ஸ்டின், சுமார் 1,53,000 ஜெர்மன் ராணுவங்களுடனும், பல நூற்றுக்கணக்கான டாங்கிகளுடனும், ரஷியர் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தினர். ரஷியப் படைகள் மேற்கு நோக்கி முன்னேற விடாமல் தடுக்க, ஜிடோமிர்-பாஸ்டாவ் பிரதேசத்தில் ஜெர்மனியர், ஒரு கடுமையான போராட்டத்தை ஆரம்பித்திருக்கின்றனர். இதற்குமுன் அதாவது சென்ற வருடத்துக்குப்பின் இதுவரையில் இவ்வித உக்ரமான போராட்டத்தை ஜெர்மனியர் நடத்தியதே இல்லை. கீவுக்குத் தென்மேற்கே இந்தப் போர்முனை இருக்கிறது. கடுமையான போராட்டம் நடந்துகொண்டிருக்கிறது. ரஷியர் ஜெர்மனியரை முறியடிப்பதில் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றனர். ஜெர்மனியருக்கு இங்கு பெருவாரியாக நஷ்டம் ஏற்பட்டது. இங்கு சென்ற ஒரு வாரமாகப் போராட்டம் நடந்துவருகிறது. இப்பொழுது அந்தப் போராட்டம் உச்ச நிலை அடைந்துவிட்டது. ஆனால் ரஷியர் வடக்கிலும், தெற்கிலும் தாக்கி முன்னேறுகின்றனர். ரஷியரின் அடுத்த குறி நிகோபோல்.

இலங்கை அனுமார்!

* கொராஸ்டென், ரெகிட்ஸி என்ற முக்கிய நகரங்களை ரஷியர் பிடித்துவிட்டனர். கொராஸ்டென் முக்கியமான ரயில்வே ஜங்ஷன்; இது ஜிடோமீருக்கு வடமேற்கே இருக்கிறது. கீவிலிருந்து 90 மைல்; பழைய போலந்து எல்லையிலிருந்து 60 மைலுக்குக் குறைவாகவே இருக்கும். ரெகிட்ஸா கோமலுக்கு 25 மைல் மேற்கே இருக்கிறது. போலந்துக்குப் போகும் ரயில் பாதை இந்த நகரின் வழியாகவே போகிறது. ரெகிட்ஸா பகுதியில் ரஷியர் 90 ஊர்களைப் பிடித்திருக்கிறார்கள். விஸீனே என்ற மற்றொரு இடமும் பிடிபட்டது. இது ரெகிட் ஸக்கு 25 மைல் மேற்கே இருக்கிறது. கொரோஸ்டென் ஜங்ஷனைச் சுற்றியுள்ள ஜெர்மன் படைகளை ரஷியர் சூழ்ந்துகொண்டு வருகிறார்கள். இந்நகருக்கு வடக்கே 25 மைலில் மற்றொரு பெரிய படை முன்னேறி வருகிறது. ரஷியப் படைகள் கோமலை நெருங்கி, அதன் வெளிப்புறத்தைப் பீரங்கியால் தாக்க ஆரம்பித்திருக்கின்றன. ஆனால், ஜெர்மனியர் நிப்பர் நதி வளைவிலிருந்தும், கிரிமியாவிலிருந்தும் அவ்வளவு சீக்கிரத்தில் வெளியேறமாட்டார்கள். கடைசி வரையில் அங்கு ஒரு போராட்டத்தை நடத்தியே தீருவார்கள். அந்த உறுதியுடன்தான் ஜெர்மனியர் இவ்வளவு கடுமையான போராட்டத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். கெர்ச் நகரை ரஷியர் இன்னமும் கைப்பற்றவில்லை. அங்கிருந்து ஜெர்மனியர் வாபஸான போதிலும், அந்நகரம் ஒரே தீ மயமாகவே இருக்கிறது! எல்லாக் கட்டிடங்களையும் ஜெர்மனியர் தீக்கிரையாக்கி வருகின்றனர். பல கட்டிடங்களைத் தரைமட்டமாக்கி விட்டனர். இன்று கெர்ச் நகரம் சுடுகாடு போலவே காணப்படுகிறது! கெர்ச் நகரம் மட்டுமல்ல; ஜெர்மனியர் வாபஸாகும் ஒவ்வொரு நகரமும் பஸ்பந்தான்! அனுமார் இலங்கையை அழித்தமாதிரி, ஜெர்மனியர் காலி செய்யும் ஒவ்வொரு நகரையும் நாசமாக்கிவிட்டுப் போகிறார்கள்!

யானைகுட்டி போடும்!

* போலந்து எல்லையிலிருந்து ரஷியர் சுமார் 60 மைல் தூரமிருந்தபோதிலும், இன்னமும் 280 மைல் தூரமிருப்பதாக ரஷியர் கூறுகின்றனர்; அதாவது, ரஷியர் போலந்தைப் பிடித்திருந்த எல்லையிலிருந்து அவர்கள் கணக்குப் போடுகிறார்கள். அப்படியானால், ரஷியர் ஏற்கனவே கைப்பற்றிய போலந்து பிரதேசத்தை மீண்டும் கைப்பற்ற உறுதிகொண்டிருக்கிறார்களென்றே தெரிகிறது. இது சம்பந்தமாக மாஸ்கோ மகாநாட்டில் ஏதேனும் ரகசிய ஒப்பந்தம் ஏற்பட்டிருக்குமா? அப்படி ரகசிய ஒப்பந்தம் எதுவும் கிடையாது என்று மாஸ்கோ மகாநாட்டுக்குச் சென்றிருந்த அமெரிக்க பிரதிநிதி கார்டல் ஹல் சொல்லுகிறார். ஆனால், ரஷியர் போக்கோ, அதற்கு நேர் விரோதமாக இருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் ஸ்டாலின், சர்ச்சில், ரூஸ்வெல்ட் முதலிய மும்மூர்த்திகளும் சந்தித்துப் பேச ஏற்பாடுகள் தீவிரமாக நடந்து வருகின்றன. இந்த மும்மூர்த்திகள் கூடிப் பேசி, பல முக்கிய முடிவுக்கு வரப் போகிறார்களாம்! இவர்கள் எங்கு, எப்பொழுது கூடப்போகிறார்களென்பதுதெம்

(அடுத்த பக்கம் பார்க்க.)

இவர்கள் எங்கே?

புருஷர்களுக்கு சாப்பாட்டு விஷயத்திலுள்ள கவலை வெறெதிலுமில்லை யென்பது அவர்களுக்குத்தெரிந்த விஷயந்தானே! அதனால்தான், அவர்களெல்லோரும் சமையலறைக்குப் புதிய உத்ஸாகத்துடன் சென்றுவிட்டார்கள். இந்த உத்ஸாகத்துக்குக் காரணமென்ன? காமதேனு வனஸ்பதி கிடைத்ததுதான். ஏனெனில் காமதேனு சிறந்த சமையலுக்குத் தேவையான சகல குணங்களையும் கொண்ட பொரியல் சாதனம். காமதேனு மணமற்றிருப்பதால் சமைக்கும் பதார்த்தங்களின் சுயமணம் மாறுவதில்லை; அதனால் சமையல் திறமையை நன்றாக எடுத்துக் காட்டமுடிகிறது. அதை உபயோகிப்பதால் சிக்கனமும் உண்டு; நெய், வெண்ணெயைப் போன்ற குணமுள்ளதாயினும் விலையில் மட்டும் மலிவு.

சிறந்த சமையற்காரர்கள் வேண்டுவது

காமதேனு

வனஸ்பதி

தயாரிப்பவர்கள்:
மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட்,
மேட்டூர்டாம் — தென்னிந்தியா

KVK 4 TM

அங்கும்-இங்கும்

யாரகசியம்! ஆனால், டிசம்பர் மாதம் 20-ந் தேதி மட்டில் இந்த மும்மூர்த்திகள் கூடிப் பேசலாமென்று தெரிகிறது. அவர்கள் கூடிப் பேசியபின் பெரிய பெரிய காரியங்கள் நடக்கப்போவதாகச் சொல்லுகிறார்கள்! எத்தனையோ முறை கூடினர்; எத்தனையோ திட்டங்கள் போட்டனர். ஆனால், இதுவரையில் எல்லாம் யானை குட்டிபோடும் கதையாகவே இருந்து வருகிறது!

வால் நுழையவில்லை!

* ரஷியர் ஆதிமுதல் இரண்டாவது போர்முனை வேண்டும்; அதுவும் உடனே வேண்டுமென்று சொல்லி வந்தனர். ஆனால், அது நேசநாட்டினர் காதில் ஏறுவதே இல்லை; எல்லாம் நுழைந்தது, வால்மட்டும் நுழையவில்லையென்ற கதை போல், என்னமெல்லாமோ சாக்கும் போக்குச் சொல்லிக் காலங் கடத்திவருகிறார்கள். நேசநாட்டினர் மட்டும் இரண்டாவது போர்முனையை ஆரம்பித்திருந்தால், ஜெர்மனியர் ரஷியாவில் இன்று இவ்வித திடீர் ''பிரேக்'' போட்டிருப்பார்களா? ரஷியாவில் சுமார் 1500 மைல் நீளத்துக்கு போராட்டம் நடந்துவந்தது. அவ்வளவு நீளமான போராட்டம் ஆபத்து என்பதை அறிந்து, ஜெர்மனியர் போர்முனையைக் குறுக்கிக் கொண்டு வந்தார்கள். இன்று நூற்றுக்கணக்கான மைல் தூரமே போர் நடந்து வருகிறது. ரஷ்யப் படைகளை குறுகிய போராட்டத்தில் நிறுத்தி வைத்துக்கொண்டு, போர்முனைகளிலுள்ள ஜெர்மன் படைகளை ஹிட்லர் இதாலிக்கும், பால்கன் நாடுகளுக்கும் கொண்டு போகலாம். இரண்டாவது போர்முனை ஏற்பட்டால் அவ்வித ஏற்பாடு செய்ய முடியாது. மேற்குப் போர்முனைகளுக்கு அந்தப் படைகளைக் கொண்டுபோகலாம். அப்படியானால் பால்கனிலும், இதாலியிலும் நேச நாடுகள் முன்னேறத் தடை இருக்காது. இரண்டாவது போர்முனை எவ்வளவு முக்கியமோ, அதேபோல் இதாலி, பால்கன் போர்முனைகளும் முக்கியம். இன்று இதாலியிலிருக்கும் நேசப் படைகள் அட்ரியாடிக் கடலைத் தாண்டி பால்கன் நாடுகள்மீது பாயலாம். இதே சமயத்தில் ரஷியாவில் முன்னேறிவரும் ரஷியப் படைகள் ருமேனியா, பல்கேரியா முதலிய நாடுகள்மீது படையெடுக்கலாம். இதை உத்தேசித்தே ஹிட்லர் பால்கன் நாடுகளுக்கு ஏராளமான படைகளை அனுப்பியிருக்கிறார். ரஷியரை முன்னேற விடாமல் தடுக்க ஜிடோமிர்-பாஸ்டாவ் பகுதியில் உக்ரமான போராட்டத்தையும் ஆரம்பித்திருக்கிறார். இதாலியிலும் நேசம் படைகளை முன்னேற விடாமல் தடுத்து முட்டுக்கட்டை போட்டிருக்கிறார்.

எல்லாம் தவிடுபொடி!

* இதாலியில் ஜெர்மன் ராணுவங்கள் ஒன்றின்பின் ஒன்றாக 40 மைல் தூரம் உட்புறம் அணிவகுத்து நிற்கின்றன. இந்த ராணுவங்களை எதிர்த்து முன்னேற முடியாமல் 5-வது ராணுவமும், 8-வது ராணுவமும் ஸ்தம்பித்துப் போய் நிற்கின்றன! சிற்சில இடங்களில் 5 வது ராணுவம் பிடித்த இடங்களைக் கைவிட்டுப் பின்வாங்க வேண்டியதாயிற்று. கரிக்னியானோ, நதிப்பிரதேசத்துக்கு வடகிழக்காக மலைக்குன்றுகளும், ஆறுகளும் ஏராளமாக இருக்கின்றன. ரோமுக்குப் போகும் பாதைகளில் வேலிகள் அமைத்ததுபோல் ஜெர்மன் ராணுவங்கள் தடுத்து நிற்கின்றன. இப்பொழுது இதாலியில் மழை அதிகம்; பனியும் ஆரம்பித்துவிட்டது, காற்று, மழை, சேறு, பனி எல்லாம் ஒன்று சேர்ந்துகொண்டதால், நேசப் படைகள் இதாலியில் முன்போல் முன்னேற முடியவில்லை. ஒரு போராட்டத்தை தீவிரமாக நடத்துவதற்கும் வழியில்லை; நேச சப்ளைகளும் வர மார்க்கமில்லை. வெனுப்ரோவுக்குவடக்கே ஜெர்மனியரை எதிர்த்துத் தாக்கி, 5 வது ராணுவம் கைப்பற்றிய சில இடங்களை மீண்டும் கைப்பற்றிக்கொண்டது. 8-வது ராணுவமோ லாங்கிரோ நதிக்கு அருகில் ஒரு அடிகூட எடுத்துவைக்க முடியாமல் திகைத்து நிற்கிறது. 8 வது ராணுவம் போராட்டத்தில் ஈடுபட்டதிலிருந்து இதுவரையில் இத்தகைய எதிர்ப்பை கண்டதே இல்லை; இவ்வாறு ஸ்தம்பித்து நின்றதும் கிடையாது. இதாலியில் ஜெர்மனியர் அவ்வளவுக்குக் கடுமையாக எதிர்த்து நிற்கின்றனர். கிரோஸில் பிரதேசத்தில் 5 வது ராணுவம் பிடித்திருந்த இடங்களை ஜெர்மனியர் மீண்டும் பிடித்துக்கொண்டனர். வெனுப்ரோவுக்கு வடக்கே ஜெர்மனியர் தாக்குதல் கடுமையாக இருந்தது. வாங்கிரோ நதிக்குக் கிழக்கிலும் கடுமையான எதிர்ப்பு. ஜெர்மனியர் விட்டுச் செல்லும் இடங்களையெல்லாம் பஸ்பமாக்கித் தள்ளுகின்றனர்! ஸாங்கிரோ நதிப் பாலங்களெல்லாம் தவிடு பொடி! அட்ரியாடிக் கடலோரமுள்ள பேஸ்காரா, ஆர்டனா முதலிய துறைமுக நகரங்களையும் பாழாக்கிவிட்டனர்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

இயற்கை கோட்டை!

நேசப்படைகள் பால்கன் நாடுகள்மீது பாயக்கூடுமென்ற பீதி ஜெர்மனியருக்கு ஆதிமுதல்இருந்துவந்தது. பால்கன் நாடுகள்மீது படையெடுப்பதற்கு ஏஜியன்ஸ் கடல் ஆதிக்கம் அவசியம். அந்த ஆதிக்கம் பெறுவதற்கு அங்குள்ள தீவுகள் கைவசமிருந்தாலொழிய, பால்கன் நாடுகள் மீது படையெடுக்க முடியாது. கருங்கடலுக்குள்ளும் பிரவேசிக்க முடியாது. கிரீஸின் தென் கிழக்கிலிருந்து, துருக்கியின் தெற்கு முனை வரையில் பல சிறு தீவுகளிருக்கின்றன; இந்த தீவுகளெல்லாம் அநேகமாக ஜெர்மனியர் வசமிருக்கின்றன. இத்தீவுகளையே ஜெர்மனியர் இயற்கை கோட்டைகளாக உபயோகிக்கின்றனர். இந்தத் தீவுகளுக்கு, டொடாக்னிஸ் தீவுகள் திறவுகோல் போன்றிருக்கின்றன. ஆகவே, டொடாக்னிஸ் தீவுகளைக் கைப்பற்றினாலொழிய, பால்கன் நாடுகள் மீது படையெடுப்பது பகற்கனவாகவே முடியும்! இதை உத்தேசித்தே ஜெர்மனியர் லிரோஸ் தீவுமீது பாய்ந்தனர்; அதற்கு அடுத்தாற்போலுள்ளகாஸ்தீவை ஏற்கெனவே கைப்பற்றிக்கொண்டனர். இத் தீவுகளில்பிரிட்டிஷ்-இதாலிய துருப்புகளிருந்தன, ஜெர்மனியர் விமானங்கள் மூலம் படைகளை இறக்கினர். அந்தப் படைகளை எதிர்த்து நிற்க பிரிட்டிஷ் இதாலிய துருப்புகளால் முடியவில்லை. லிரோஸ் ஜெர்மனியர் வசமாயிற்று. இதனால் ஸ்யாமோஸ் தீவும் ஆபத்துக்குள்ளாகி இருக்கிறது. இந்தத் தீவுகளில் பிரிட்டிஷார் தோல்வியடையக் காரணம் என்ன? ரோட்ஸ், கிரீஸ், கிரீட், பல்கேரியா முதலிய இடங்களிலுள்ள விமானத் தளங்களிலிருந்து ஜெர்மன் விமானங்கள் துரிதமாக வந்து தாக்கின. பாரச்சூட் மூலம் துருப்புகளைக் கொண்டுவந்து இறக்கின. ஜெர்மன் விமானங்களை எதிர்க்க நேச நாடுகளிடம் விமானங்கள் இல்லாமலில்லை; ஏராளமாக விமானங்கள் இருப்பது மெய்; ஆனால், அருகில் விமானத் தளங்கள் கிடையாது. சுமார் 400, 500 மைலுக்கப்பாலிருந்து பிரிட்டிஷ் விமானங்கள் வரவேண்டியிருந்தது. ஆகவே, துரிதமான சப்ளைகளையோ, அல்லது, உதவிக்குப் படைகளையோ கொண்டுவர முடியவில்லை. இதனால், ஜெர்மனியர் அந்த தீவுகளில் வெற்றிபெற்றனர்.

பகிரங்க ரகசியம்!

* இத் தீவுகள் துருக்கிக்கு வெகு சமீபத்திலிருக்கின்றன. துருக்கி மட்டும் நேசநாடுகளுக்கு இடம் கொடுக்குமேயாயின், இத் தீவுகளை நொடிப்பொழுதில் கைப்பற்ற நேசநாடுகளால் முடியும். ஸிரியா, இராக் மூலம் துருக்கிக்குப் படைகளை அனுப்பி, அங்கிருந்து பால்கன் நாடுகளைத் தாக்கலாம். ஆனால், துருக்கி அதற்கு இடங் கொடுக்குமா? சந்தேகமே. கடற்படை தளங்கள், அல்லது, விமானத் தளங்களையாவது கொடுத்துதவுமா? கொடுத்துதவலாமென்ற நம்பிக்கை சிலருக்கு இருந்துவருகிறது. துருக்கியின் போக்கு ஜெர்மனியருக்குச் சந்தேகத்தை உண்டு பண்ணியதால்தான், துருக்கியின் மண்டையிலடிக்கவும், அதற்குப் பயத்தை உண்டுபண்ணவும் ஜெர்மனியர் டொடாக்னிஸ் தீவுகள்மீது படையெடுத்தனர். இதே சந்தேகத்துடன்தான் வான் பேபன் பெர்லினுக்குப் பறந்து போயிருக்கிறார். ஹிட்லரையும், வான் ரிப்பன்டிராபையும் அவர் கலந்தாலோசித்து வருகிறார். போர்ச்சுகல் அஜோரஸ்தீவை நேச நாடுகளுக்குக் கொடுத்துதவியது போல், துருக்கியும் சில விமானத்தளங்களை நேச நாடுகளுக்குக் கொடுத்துதவலாம். அதேசமயத்தில், அது போர்ச்சுகல் தேசத்தைப்போல் நடுநிலைமை வகிக்கலாம். இதையெல்லாம் எதிர்பார்த்தே ஹிட்லர், ரஷியாவிலும், இதாலியிலும் டொடாக்கனிஸ் தீவுகளிலும், நேசப் படைகளுக்குச் சரியான ''பிரேக்'' போட்டிருக்கிறார்! துருக்கி நேச நாடுகளுடன் சேர்ந்தால் அதன்மீது பாய ஜெர்மனியருக்கு வசதி இருக்கிறது. இந்த நிலைமையில் துருக்கி எந்தப் பக்கம் சாய்கிறதோ பொறுத்துப் பார்ப்போம். பல்கேரியாவின் தலைநகரான ஸோபியாவை நேச விமானங்கள் கடுமையாகத் தாக்கின. ருமேனியாவிலுள்ள புளோஸ்டி எண்ணெய்க் கிணறுகள்மீதும் குண்டுகளை எறிந்தன. இந்த எண்ணெய்க் கிணறுகள் ஜெர்மனிக்கு ரொம்ப முக்கியமானவை. பாரிஸ் உட்பட சுமார் 36 பிரஞ்சு நகரங்களை நேச நாட்டினர் எச்சரிக்கை செய்திருக்கின்றனர். ஜெர்மனியிலுள்ள பல நகரங்கள் தாக்கப்பட்டன. பதிலுக்கு ஜெர்மனியர் பிரிட்டனைத் தாக்கினர். இது ஆரம்ப திசை; இனிமேல் தான் தீவிரமான போராட்டம் நடக்கப் போகிறது. சீக்கிரத்தில் ஐரோப்பா முழுவதும் இந்தப் போராட்டத்தில் கூட்டிப் புரளும் என்பதில் சந்தேகமில்லை.



நாகரீக நங்கையர் விரும்புவது
நவ நாகரீக நகைகள்
எங்கவிடம் விதவிதமான வைர, தங்க நகைகளும், வெள்ளிப் பாத்திரங்களும் ஏராளமாக உள்ளன.
ஒருமுறை எமது
"ஸ்வர்ண மாளிகை"க்கு
விஜயம்செய்து பாருங்கள்.
P. A. ராஜு செட்டியார் சகோதரர்
கோயமுத்தூர்

மனோரதம்

[2-ம் பக்கம் தொடர்ச்சி]

உண்டுபண்ணின. சேத கணக்கு எடுக்க முடியவில்லை. அந்தக் கணக்கு ஜப்பானியரிடம்தானிருக்கும். மாண்டலே அருகில், ஐராவதி நதியில் போய்க்கொண்டிருந்த 5 கப்பல்கள் தாக்கப்பட்டன. எத்தனை மூழ்கியது, எத்தனை சேதமடைந்ததும் என்பதும் தெரியாது. ஜப்பானியர் குண்டு எறிந்தால், ஏரிகளிலும், குளங்களிலும், வயல் காடுகளிலுமே விழும்; ஆனால், நேச குண்டுகள் ஒருபோதும் குறி தவறாது! குறிப்பிட்ட இடத்தில் குறி தவறாமல் விழுந்தே தீரும். ஆனால், ஏற்பட்ட சேதத்தைக் கணக்கெடுத்துக் கொள்ளவேண்டியது ஜப்பானியர் வேலை!

பூதம் மிரட்டுதே!

பர்மாவில் எப்படி ஜப்பானியர் ஜம்பம் சாயவில்லையோ, அதேபோல் பாஸிபிக்கிலும் ஜப்பானியர் கைவரிசை பலிக்கவில்லை, சாலமன் தீவு போராட்டம் இன்னமும் நடந்து கொண்டிருக்கிறது. போகன்வில்லா தீவின் எல்லா திசைகளிலும் அமெரிக்க விமானங்கள் தாக்கின. பீவா என்ற இடம் குறிப்பாகத் தாக்கப்பட்டது. நியுகினியா குறிப்பிட்ட இரு இடங்கள்மீது சுமார் 220 டன் குண்டுகளை எறிந்தன-ரபால், காஸ்பாடா, பியூகா, பியூலின் முதலிய நான்கையும் நேச விமானங்கள் கடுமையாகத் தாக்கின. பல படகுகள் மூழ்கடிக்கப்பட்டன. நியூபிரிட்டனில் நேச விமானங்கள் 3 ஜப்பானிய டார்பிடோ கப்பல்களைத் தாக்கின. நியூகினியாவிலுள்ள நேச கப்பல்களை ஜப்பான் விமானங்கள் இருட்டில் தாக்கின. சில கப்பல்கள் சேதமடைந்தன. கில்பர்ட் தீவுமீதும், மார்ஷல் தீவுமீதும் அமெரிக்க விமானங்கள் குண்டுகளை எறிந்தன. இத் தீவுகள் சாலமன் தீவுக்கு 1.000 மைல் தூரத்திலும், ஹானலூலு தீவுக்கு 2000 மைல் தூரத்திலுமிருக்கின்றன. ரபாலிலும் கடுமையான விமானப் போராட்டம் நடந்தது. சென்ற 6 தினங்களில் 102 ஜப்பானிய விமானங்கள் நஷ்டம்; நேச விமானங்கள் 15 நஷ்டமடைந்தன. ஜப்பானுக்கு நஷ்டத்தின்மேல் நஷ்டம் ஏற்பட்டாலும் ஜப்பானின் பீதி என்னமோ போய்விடவில்லை! பஞ்சப்பேய் மிரட்டிக் கொண்டிருப்பதுபோல் ஜப்பான் பூதமும் மிரட்டிக்கொண்டுதானிருக்கிறது! அந்தப் பூதம் என்றுவந்து விழுந்து தொலைக்கிறதோ தெரியவில்லை! ஆனால், பூதம் வராது; வந்தாலும் பாதகமில்லை, பயப்படவேண்டிய அவசியமே இல்லையென்ற அசட்டுத் தைரியம் கூடாது!

Edited, Printed and Published by P. ALBIN FERNANDO at the "TAMIL MANI," Press, 21, Sembudoss St, G. T. Madras.